12 பக்கங்கள் விலை 50 காசு

# நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2009 24—9—1978 | இதழ் 1-2

## அர்ச்சகர் சட்டம் எழுந்து நடமாட....

தி. மு. கழக ஆட்சி நடைபெற்ற நேரத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றினோம். அந்தச் சட்டம் உயர் சாதிக்காரர்கள். அதிலும் குறிப்பாக சில வகுப்பார்தான் ஆலயத்தில் இருக்கிற ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்யலாம் என்று இருப்பதற்குப் பதிலாக எல்லா வகுப்பினரும் அர்ச்சனை செய்வதற்குரிய தேர்வு எழுதி, அதில் தேர்வுபெற்ற யாரானாலும், அவர்கள் யாராக இருந்தாலும், எந்தச் சாதியாக இருந்தாலும் தாழ்த்தப்பட்ட அரிசன் என்று சொல்லப்படுகிறவர்களானாலும் அவர்களும் ஆலயத்தில் அர்ச்சகர்களாக ஆகலாம என்ற சட்டத்தைச் சட்டப் பேரவையிலே கொண்டு வந்தோம். ஆனால் அந்தச் சட்டத்தை எதிர்த்து சனாதனிகள் நீதிமன்றம் சென்றார்கள். உச்சநீதிமன்றந்தில் அந்தச் சட்டம் முடக்கப்பட்டது. முடக்கப்பட்ட அந்தச் சட்டம் எழுந்து நடமாட வேண்டுமேயானால், ஒரேயொரு வழிதான் உண்டு. நாம் நிறைவேற்றியுள்ள சட்டத்திற்கேற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும்.

இந்த நூற்றாண்டு விழா ஆண்டு முடிவதற்குள் இதனைச் செய்து தரவேண்டுமென்று மத்திய அரசை நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். —கலைஞர்.

(தந்தை பெரியார் நூற்றாண்டு விழாப் பேச்சு)





## மணவழகர் மறைவு

நமது கழகத்தின் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களின் அன்புத் தந்தை கல்யாணசுந்தரனார் அவர்கள் மறைந்த செய்தி, நமக்கெல்லாம் பெரும் துயரம் அளிக்கக்கூடிய ஒன்றாகும். தழைத்துக் குலுங்கிடும் தமிழ்உணர்வுக் குடும்பத்தின் மூத்த பெருந்தகை அவர். அவரது பொதுவாழ்வு நுழைவு அவரின் வாலிபப் பருவத்திலேயே ஏற்பட்டதாகும். விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, காங்கிரஸ்கட்சியின் வலிவுக்கும், பொலிவுக்கும் ஆக்கம் தேடியவர். கதர் இயக்கத்தின் வெற்றிக்காக நடைபெற்ற நாடு தழுவிய பிரச்சாரத்திற்கு ஊக்கம் ஊட்டும் வண்ணம் சிதம்பரத்தில்கதர்க் கடை ஒன்றைத் திறந்தார். காங்கிரஸ் இயக்கத்தில் கல்யாணசுந்தரனார் அவர்கள் பெரியார் அவர்களின் ஆதரவாளராக விளங்கினார். அவரது கதர்க் கடையில் பெரியாரின் படம் எடுப்பாக மாட்டி வைக்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்ல, ஒருஅரிசனத் தோழரைக் கடையில் உட்கார வைத்து வியாபாரத்தைக் கவனிக்கச் செய்தார். உயர் சாதிக்கார காங்கிரசாரே இவரது கடையை புறக்கணிக்கத் தொடங்கினர். அஞ்சவில்லை இவர். ஆயிரக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டு கடையை மூடுகிற அளவுக்கு நொடித்துப் போன போதும் கூட இவர் நெஞ்சம் தளரவில்லை. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் இவரை ஈர்த்துக்கொண்டது. சிதம்பரத்தில் நீதிக்கட்சியின் செயலாளராகவும். திராவிடர் கழகச் செயலாளராகவும்; ஏன் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளராகவும் பணியாற்றிய தொண்டுள்ளம் படைத்த தூயவர்தான் இன்று மறைந்துவிட்ட கல்யாணசுந்தரனார்! தன் பெயரைத் தமிழாக்கிக் கொள்ள வேண்டும் என்று மணவழகர் என்ற பெயரில் கட்டுரைகள் தீட்டுவதும் உண்டு. அதன் தொடர்ச்சியாகத்தான் அவர்கள் திருமகன் இராமையா அவர்கள் அன்பழகனாக மாறி, இன்று கழகமும் தமிழகமும் காக்கும் பொறுப்பேற்று நமது பொதுச்செயலாளராகக் கடமையாற்றுகிறார். நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கக்காலத்தில் தளபதி அழகிரி, மாயூரம் நடராசன், எஸ். இராமநாதன், மூவலூர் மூதாட்டியார் ஆகியோருடன் தோழமைபூண்டு, அவர் இயக்கம் வளர்த்த பாங்கு என்றென்றும் மறக்க முடியாததாகும். அவரது முயற்சியால் நடைபெற்ற பிரச்சாரக்கூட்டங்கள்தான் எத்தனை! மாநாடுகள் கொஞ்சமல்ல! தந்தை பெரியாரும், அறிஞர்அண்ணாவும் மறைந்துவிட்டஇந்தப் பெரியவரிடத்திலே தனி மதிப்பும் அன்பும் காட்டி வந்தனர். தன் மகனைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என்ற மொழிக் கொப்ப நமது பேராசியரை நமக்கும் தமிழகத்திற்கும் தந்த பெருமை அவருக்கு உண்டு.

தன் மக்கள் அனைவரையும் தமிழ் உணர்வு மிக்கவர்களாக அவர் வளர்த்தார். வயது முதிர்ந்த நிலையிலே கூட, அவர் நடமாடிக் கொண்டிருந்த நாள் வரையில், இயக்கக் கொள்கைகளைப் பரப்பிடும் வேலையிலும் என் போன்றோரை ஊக்கப்படுத்தும் செயலிலும் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

அவரது மறைவு குறித்து எனது ஆழ்ந்த இரங்கலை பேராசிரியர் அவர்கட்கும் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. கருணாநிதி.

## டாக்டர் கோவூர் மறைவு

பகுத்தறிவாளர் டாக்டர் கோவூர் இலங்கையில் இயற்கையெய்தினார்என்றசெய்திகேட்டுதுயருறுகிறோம். டாக்டர் கோவூர் அவர்களின் மரணம், இலங்கைப்பகுத்தறிவாளர்களுக்கு மட்டும் ஏற்பட்ட இழப்பல்ல; அவர் மறைவு கேட்டு உலகப் பகுத்தறிவாளர்கள் அனைவருமே ஆறாத்துயரில் மூழ்கிவிட்டனர்.

'கடவுள் அவதாரங்கள்' என்று சொல்லிக்கொண்டு மக்களை ஏமாற்றி ஏராளமான பணம் ஈட்டி, 'சொகுசு' வாழ்க்கை நடத்திவரும் 'பாபா'க்கள், 'சுவாமிஜீ'க்கள் 'யோகி'கள் ஆகியோரின் முகத்திரைகளைக்கிழித்தெறிய முனைந்து நின்றவர் கோவூர்.

கடவுளைக் காட்டுகின்றவருக்கு ஒரு இலட்ச ரூபாய் பரிசு தருவதாக முழங்கிய இந்த நாத்திகச் செம்மல், கேரளாவில் பிறந்து, இலங்கையில் குடியேறி, வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுப் பிரச்சாரங்கள் செய்து தம்முடைய எண்பத்திரண்டாவது வயதில் இயற்கையெய்திவிட்டார்.

சிறந்த மனோதத்துவ நிபுணரான இவரை 'ஒப்பற்ற அறிவுலக மேதை' என உலகம் முழுவதும் போற்றி வருகிறது.

# விடுதலைப் போர்.. வெல்க!

மூன்று முறை உலக வீரர் என்ற பட்டத்தைப் பெற்ற 'முகம்மது அலி'—இன்று உலக விளையாட்டு அரங்கில் ஒலித்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற ஓங்குபுகழ் பெயர். உலகக் குத்துச் சண்டை வீரர் என்ற விருதை ஏழு திங்களுக்கு முன்னர் எதிர்பாராது இழந்து விட்ட இவர், மீண்டும் அதைப் பெறுவதில் முனைப்போடு நின்றார். எவரிடம் சமீப காலத்தில் தோல்வி கண்டாரோ அவரிடம் மீண்டும் குத்துச் சண்டை போட்டு வெற்றி அடைந்தார். உலகிலேதங்களுடைய இனம்தான் உயர்ந்த இனம் என்று இன்னும் இறுமாப்போடு கருதிக்கொண்டிருக்கிற வெள்ளை நிற இனத்தைச் சேர்ந்தவர் இருக்கத்தான்செய்கிறார்கள். அவர்களில் பலர்இவரோடுமோதித்தோல்வியைஅணைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலை சாதியாலோ, மதத்தாலோ, பணத்தாலோ, நிறத்தாலோ இல்லாது போக்க வேண்டும் என்று நினைத்து செயலாற்றிய தலைவர் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15-ஆம் நாள் தான் அமெரிக்க நாட்டிலுள்ள நியூஆர்லீன்ஸ் நகரில் முகம்மது அலிக்கும், லியான் ஸ்பின்ஸ்கும் குத்துச் சண்டைநடைபெற்றிருக்கிறது.

இந்த இரண்டு வீரர்களும் களத்திற்குச் சென்ற காட்சி கண் கொள்ள காட்சியாகக் காணப்பட்டது.

சண்டை தொடங்கிய முதற் கட்டத்தில் தனக்கே உரிய பழைய வேகத்தை இழந்த நிலையில் அலி காணப்பட்டார். எனினும் சண்டை தொடர்ந்த நிலையில் அலிக்கு வலிவும், திறமும் தாமே சேர்ந்தன. இந் நிலையில்ஸ்பிங்க்ஸ் புலியெனப் பாய்ந்திருக்கிறார். என்றாலும் முகம்மதுஅலி சண்டையின் முடிவில் வெற்றியைப்பெற்றிருக்கிறார்.

இழந்து விட்ட விருதை மீண்டும் எக்களிப்போடு அலி ஈட்டியிருக்கிறார்.

முகம்மதுஅலி உலகம்புகழும் குத்துச் சண்டை வீரர் மட்டுமல்ல; உலகில் கறுப்பர் இனம் எங்கெங்கு அடிமைகளாய், கல்வி அறிவு அற்றவர்களாய், ஆக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்களோ அவர்களுக்காகப் போராடும் வீரராகவும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாம் நாட்டில் ஆதிக்கம் செலுத்த எண்ணியது. வட வியட்நாம் மீது ஆக்கிரமிப்புப் போரில் ஈடுபட்டது. அப் போரில் அனைத்து அமெரிக்கர்களும்கட்டாயமாகப்பங்கேற்க வேண்டுமென்று ஆட்சியாளர்கள் கட்டளையிட்டனர் அமெரிக்கக் குடிமகனாகிய முகம்மது அலி அப்போரில் பங்கேற்க மறுத்துவிட்டார். அதற்கான தண்டனையும் ஏற்றார்.

கறுப்பர் இனமான நீக்ரோ மக்களின் அடிமை விலங்கொடிக்க ஆப்ரகாம் லிங்கன் ஆர்ப்பரித்ததை வரலாறு இன்னமும்வாழ்த்திக்கொண்டிருக்கிறது.

சில நூற்றாண்டுகளுக்குப் பின் கறுப்பர் இனமக்களில் ஒரு எழுச்சி மிக்க தலைவன் தோன்றினான் அவன்தான் மார்ட்டின் லூதர்கிங். தன்இன மக்களுக்காகத் தன் கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை போராடினான். உலகமே வியந்தது! நோபல் பரிசும் அவனைத் தேடிவந்தது. அந்த ஒப்பற்ற தலைவன் லூதர்கிங் ஆப்ரகாம் லிங்கனைப்போல் சுட்டு வீழ்த்தப்பட்டான்!

விடுதலைப் போராட்டம் என்றும் வீழ்ந்ததில்லை—இது வரலாற்று உண்மை. கறுப்பர் இனம் உலகில் மற்ற இனமக்களுக்கு ஈடாக, இணையாக வாழ்ந்திட, அடிமைப்பட்டுக் கிடப்போர் ஆட்சி நடத்திட போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டுதானிருக்கிறது!

## சா. கணேசன்

கறுப்பர் இனத்தை அடக்கியும் ஒடுக்கியும் ஆதிக்கம் செலுத்துகின்றனர் அமெரிக்க மண்ணில். அடக்குமுறையை எதிர்த்து அங்கு வீறுகொண்டு போராடுகின்றனர் நீக்ரோ மக்கள். அந்த வீரமிகு போராட்டத்தில் தன் இன மக்களுக்காக முகம்மது அலியும் வீறுகொண்டு போராடிக் கொண்டு வருகிறார்.

தென் ஆப்பிரிக்காவின் விடுதலைக்காக வெள்ளையர்களை எதிர்த்து நடத்திவரும் விடுதலைப் போராட்டத்தில் கறுப்பர்களின் வீரப்போர் உலகத்தின் கவனத்தையே ஈர்த்திருக்கிறது. சோசலிச நாடுகளெல்லாம் இன்றைய தினம் விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு அளித்துக் கொண்டிருக்கின்றன.

தென்னகத்து மக்கள் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் தென் ஆப்பிரிக்க விடுதலைக்கு ஆதரவாக இன ஒதுக்கலை எதிர்த்து நடைபெற்ற சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாநாட்டில் பங்கேற்றிருக்கிறார். அவர் ஆற்றிய வீர உரையினைக் கேட்டோர் வியந்தனர். சர்வதேசப் பிரச்சினையிலும் கழகத்திற்கு அக்கறை உண்டுஎன்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.


"எங்கெங்கு அடிமைப் பட்டுக் கிடக்கின்ற மக்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் எங்கள் ஆதரவு என்றும் உண்டு. தென் ஆப்ரிக்க மக்கள் இப்போது ஆயுதம் தாங்கி விடுதலைப் போரை நடத்திவருகின்றனர்.

அறவழியில் நம்பிக்கையுள்ளவர்களாக நாங்கள் இருந்துபோதிலும் — அந்தக் கறுப்புநிற மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஆதரிக்கிறோம்! அந்தவிடுதலைப் போராட்டம் வெல்க! வெல்க!! என்று கலைஞர் வாழ்த்தினார்.

வெற்றி வீரர் முகம்மது அலி குத்துச் சண்டையில் பெற்ற வெற்றிக்குத்தமிழகம் வாழ்த்துக் கூறுகிறது. இன ஒதுக்கலை எதிர்த்துப் போராடும் முகம்மது அலி போன்றோரின் விடுதலை வேட்கைக்கு என்றென்றும் நல் ஆதரவு அளிக்கும் கழகம்!

★


முப்பெரும்தத்துவ டாலர் செயின்கள்




மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் "மணிவாசகம்" பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் சிலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானால் ரூ. 3 அட்வான்சும். செயினுடன் டாலர் வேண்டுமானால் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினால் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.



தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்
"பேட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

“உங்கள் பொதுவுடைமைக் கட்சி ஏன் இந்தத் தமிழ்நாட்டில் பூத்துக்குலுங்கவில்லை? ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை?”

—என்று பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த ஒரு நண்பரிடம் கேட்டுப்பாருங்கள்.

உடனே சினத்தில் குளித்தெழுந்து சீறி வரும் இப்படி ஒரு விடை:

“எல்லாவற்றுக்கும் காரணம் உங்கள் அண்ணாதான்! இனிமையான தமிழில்பேசியே அவர் இளைஞர்களை மயக்கிவிட்டார்; கெடுத்துவிட்டார். எங்கள் பொதுவுடைமைக் கட்சியே வளர முடியாதபடி அவர் தடுத்துவிட்டார்; எங்கள் செயல்திட்டங்களையெல்லாம் தகர்த்துவிட்டார்!”

அந்த நாளில் கிரேக்கநாட்டுஆட்சியாளர்கள் — ஆதிக்கக்காரர்கள் — சிந்தனைச்சிற்பி சாக்ரட்டீஸ் அவர்களை எப்படி நிந்தனை செய்தார்களோ — அப்படித்தான் தமிழ்நாட்டுப் பொதுவுடைமை இயக்கத்தோழர்களும் அண்ணாவைக் கண்டிக்கிறார்கள். அவரைத் தங்கள் முதல் எதிரியாகவே கருதுகிறார்கள்.

அவர் மட்டும் தமது அழகு மணக்கும் எழுத்தாலும் பேச்சாலும் திராவிட இயக்கத்தைச் செழிக்கச் செய்திராவிட்டால்—தங்களது பொதுவுடைமை இலட்சியம் எளிதில் இங்கே ஈடேறி இருக்குமே என்றும் ஏங்குகிறார்கள்,

அவர்களுடைய ஆத்திரத்தில்‘ ஏக்கத்தில்’ பொருள் இல்லாமல் இல்லை. அண்ணா மட்டும் தோன்றியிரா விட்டால் ஏழைப் பாட்டாளிகள் மலிந்த இந்த இருண்ட தமிழ் நாட்டில் பொதுவுடைமைக் கட்சிதான் எப்போதோ ஆட்சிக் கொலு ஏறியிருக்கும். கேரளத்தையும் மேற்கு வங்கத்தையும் முந்திக்கொண்டு மார்க்சீய தத்துவம்தான் இங்கே மணம் வீசியிருக்கும்.

### பொதுவுடைமைக்கு எதிரியா?

ஆனால் அண்ணா மீது ஆத்திரப்படும்பொதுவுடைமை இயக்கத்தோழர்கள் ஒன்றைமறந்து



டத்துக்குத்தடைக்கல்லாக அண்ணா நின்றாரா? கண்டிப்பாக இல்லை.

### சுரண்டலைச் சுட்டெரித்தவர்

ஆழ்ந்து ஊன்றி நோக்கினால் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு தலைசிறந்த பொதுவுடைமையாளரராகவே பொன்னொளி வீசியிருக்கிறார்.

அவரது எழுத்துக்களும் பேச்சுக்களுமே இதற்குச் சரியான சாட்சியங்களாக நிற்கின்றன.

ஒரு பொதுவுடைமையாளர் எப்படி இருக்கவேண்டும்? எந்த வழியில் நடக்கவேண்டும்? எந்த வழியில் வாழவேண்டும்?

முதலில் அவர் மனித உழைப்பில் மட்டுமே நம்பிக்கை வைக்கவேண்டும்.

அந்த உழைப்பு நம்பிக்கைக்கு முதல் எதிரியான கடவுள் நம்பிக்கையை அவர் ஒழித்துக்கட்ட வேண்டும்

உழைப்போர் பலர்; அவர்களை உறிஞ்சிக் கொழுப்போர் சிலர்—என்கிற முறையில் புரையோடிவரும் ‘சுரண்டல்’ கொடுமையை அவர் சுட்டெரிக்கவேண்டும்; தட்டிக்கேட்கவேண்டும்,

தனியுடைமைச் சொத்துரிமைக் கொள்கையைத் தகர்க்கவேண்டும்.

முரண்பட்ட மூடநம்பிக்கைகளுக்கிடையே—அறிவாளி அறிவற்றவனையும் — இருப்பவன் இல்லாதவனையும் – பலமுள்ளவன் பலமற்றவனையும்—சுரண்டிச் சுகபோகியாக வாழ்ந்திட வாய்ப்பும் வசதியும் அமைந்ததாகத்தானே இன்றைய சமுதாயம் இருக்கிறது!

—என்று சாடியிருக்கிறார் அண்ணா.

இது பொதுவுடைமைக் கொள்கை இல்லையா?

### மார்க்ஸ்—ஏங்கல்சின் வழித்தோன்றல்

இனிமார்க்ஸ்—ஏங்கல்ஸ்தீட்டிய பொதுவுடைமைக் கட்சி அறிக்கையிலுள்ள சில கோட்பாடுகளையே அண்ணா எவ்வாறு அப்படி அப்படியே எதிரொலித்திருக்கிறார் என்பதையும் காண்போம்,

‘...பொதுவுடைமையாளரின் தத்துவத்தை இரத்தினச் சுருக்கமாய்—தனிச் சொத்துடைமையை ஒழித்திடல் என்பதாய்க் கூறலாம்...” என்கிறது அறிக்கை.

இதே வரிகளுக்கு அண்ணா எத்தகைய புரட்சிமிக்க விளக்கத்தைக் கொடுக்கிறார் பாருங்கள்:

“தனிப்பட்ட எவரும் எந்தத் தொழிற்சாலையையும் எடுத்து நடத்த அனுமதிக்கக் கூடாது. முதலாளிகளிடம் இருக்கும் எல்லா ஆலைகளையும் அரசாங்கம் கைப்பற்றிக்கொள்ள வேண்டும். எல்லா தொழிற்சாலைகளையும் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். அவ்விதம் செய்தால் அதில் கிடைக்கும் இலாபம்அரசாங்கத்தைச் சாரும்; எந்தத் தனிப்பட்டமுதலாளியையும் சாராது. அதனால் முதலாளித்துவம் வளராது. பூண்டோடு இல்லாமல்ஒழிந்துவிடும்! முதலாளிக்குக் கிடைக்கும் இலாபம் அவர்கள் மேனி மினுக்குக்குப் பயன்படுத்தும் அளவு இருக்கக்கூடாது. அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கு—குடும்பத்தைக்காப்பாற்றுவதற்குப் போதுமானதைத் தவிர — மீதிப் பணத்தை

# அண்ணா ஒரு பொதுவுடைமைச் சிற்பி!

மறைமலையான்

விடுகிறார்கள் அல்லது புறக்கணிக்கிறார்கள்; அண்ணாவுக்கு எந்த இனிய தமிழ் கைகொடுத்ததோ அதே இனிய தமிழைத் தாங்களும்சிறப்பாகப் பயன்படுத்திப் பொதுவுடைமை இயக்கத்தை நோக்கி இளைஞர்களைத் திருப்புவோமே என்று நடைமுறை நிலைக்குமதிப்புக் கொடுத்து அவர்கள் நடக்க முற்படவில்லை.

மாறாக அண்ணாவைத் தூற்றுவதோடு தங்களின் சிந்தனை வளையத்தைச்சுருக்கிக்கொண்டு விடுகிறார்கள். அவருடைய வளர்ச்சிக்கு—அவர் கண்டிருக்கும் விளைச்சலுக்கு-என்னென்ன காரணங்கள் என்பதை ஆராய்வதற்கே அந்த நண்பர்கள் மறுக்கிறார்கள்.

அண்ணாவின் வெற்றி மாளிகை அழகுத் தமிழை மட்டுந்தான் அடித்தளமாகக்கொண்டு எழும்பியிருக்கிறதா?

இல்லை.

ஏழைகளிடம் தோழமை உணர்வு—இனிய தமிழ்—பகுத்தறிவு—சுரண்டலை எதிர்த்து நிற்கும் சூறாவளித் துணிச்சல் — சொந்த நலனைப் பற்றியே துளியும் சிந்திக்காத தன்னல மறுப்பு —தாய்மை உணர்வு—எளிய வாழ்வு—இரக்கப் பண்பாடு—எல்லாமே இணைந்துதான் அண்ணாவின் வெற்றி மாளிகையைக் கட்டியிருக்கின்றன; அவரைத் தன்னேரில்லாத தலைவராகத்-தலைநிமிர்ந்து நடைபோடும் தளபதியாக—அவரைச் சுடர்விடச் செய்திருக்கின்றன.

ஆகவே அண்ணாவைப் பற்றி மதிப்பீடு செய்யும்பொழுது அவரது கைவண்ணத்தில் —வாக்குவன்மையில் — மிளிர்ந்த கன்னல் தமிழை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்வது சரியாகாது.

பொதுவுடைமை இயக்க நண்பர்கள் பொருமுவதைப்போல அவர்களுடைய கட்சி வளர்ச்சிக்கு வேண்டுமானால் அண்ணாவின் ஆற்றல் தடையாக இருந்திருக்கலாம்; ஆனால் காரல்மார்க்சும், ஏங்கல்சும் இணைந்து வகுத்[illegible]த்த பொதுவுடைமைத் தத்துவத் தேரோட்

தமக்கென்றோ தமது எதிர்கால வழித்தோன்றல்களுக்கு என்றோ அவர் சொத்துக்களைத் திரட்டிக்கொள்வதில் சிந்தனையைச் செலுத்தக்கூடாது.

காரல் மார்க்சும் — ஏங்கல்சும் இணைந்து 1848—இல் முதன் முதலில் ஜெர்மன் மொழியில் வெளியிட்ட “பொதுவுடைமைக் கட்சி அறிக்கை’ மேலே காணும் பரவலான கொள்கைகளையே உள்ளடக்கமாகக் கொண்டு வலியுறுத்துகிறது.

இந்தக்கொள்கைகள் அனைத்திலும் அழுத்தமான பிடிப்புக்கொண்டவரே அண்ணா.

அவர் எப்பொழுதுமே மனித உழைப்பில் நம்பிக்கை கொண்டவராகவே வாழ்ந்திருக்கிறார்

“உலகம் மாயம் இல்லை; உழைப்பவன் வாழ்வும் மாயம் இல்லை; ஆனால் உழையாதவனின் உல்லாசத்தில்தான் ‘மாயம்’ இருக்கிறது.” என்று இடித்துக்காட்டியவர் அண்ணா.

இது பொதுவுடைமைக் கொள்கை இல்லையா?

பெரியாரின் அடிச்சுவட்டில் அவர் கொண்டிருந்த ‘கடவுள் மறுப்புக்’ கொள்கையும் ஒளிவு—மறைவு இல்லாதது.

“குந்தக் குடிசையின்றி, உண்ண உணவின்றி, அணிய ஆடையின்றி, மக்கள் நிர்க்கதியாய் நிலவும் போது—ஆண்டவன் பேரால் கோட்டைகள் போன்ற கோயில்களையும் வாகனங்களையும் மண்டபங்களையும் கட்டுகின்றீரே? இது அன்புடைய ஆண்டவனுக்கு, அருள் படைத்த தந்தைக்கு உவந்த செயலா?” என்று எள்ளி நகைத்தவர்—எதிர்ப்புக்கணை தொடுத்தவர் அண்ணா.

இது பொதுவுடமைக் கொள்கை இல்லையா?

சுரண்டல் எந்த வடிவில் வந்தாலும் அதனைச் சுட்டெரிக்க வேண்டும் என்பதிலும் அழுத்தமான கருத்துக் கொண்டவர் அண்ணா:

“எத்தனையோ சிக்கல்களுக்கிடையே—

வரிபோட்டு அரசாங்கம் வாங்கிக்கொள்ள வேண்டும்!”

—அந்தப் பொதுவுடைமை அறிக்கைக்கு இதைவிடத் தெளிவான விளக்கம் வேண்டுமா?

‘......முதலாளித்துவத் தனித்தன்மையையும் முதலாளித்துவ சுயேச்சையையும், முதலாளித்துவ சுதந்திரத்தையும் ஒழிப்பதுதான் குறிக்கோள்!” என்று வரையறுத்து வலியுறுத்துகிறது ‘மார்க்ஸ்’—ஏங்கல்ஸ் அறிக்கை.

இதே குறிக்கோளைத் தானே அண்ணாவும் எதிரொலித்திருக்கிறார், மார்க்ஸ்—ஏங்கல்ஸ் இவர்களின் வழித் தோன்றலாகத்தானே தமது வாழ்க்கைப் பயணத்தை நடத்தியிருக்கிறார்!

### ஒடுக்கப்பட்ட இனத்தின் ஒரே குரல்!

மனிதகுலத்தை இரண்டு பெரும் பிரிவுகளுக்குள் பகுத்துப் பார்த்தனர் மார்க்சும்—ஏங்கல்சும்.

ஒன்று முதலாளித்துவ இனம்; மற்றது பாட்டாளி இனம்.

அதாவது ஒன்று ஒடுக்குகின்த் இனம்! இன்னொன்று ஒடுக்கப்படும் இனம்.

இந்தப் பகுப்பையேதான் அவர்களது அறிக்கை இப்படிக் கூறுகிறது:

“...சமுதாயம் மேலும் மேலும் இரு பெரும் பகை முகாம்களாய்— எதிரும் புதிருமாய் இரு பெரும் வர்க்கங்களாய் முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளிவர்க்கமுமாய்—பிளவுண்டு வருகிறது.”

இந்த நிலைமைக்கான பின்னணிவாழ்க்கை முறை எவ்வாறு இருந்தது என்பதையும் அந்த அறிக்கை இப்படிப் படம் பிடிக்கிறது:

“...ஒடுக்குவோரும், ஒடுக்கப்படுவோரும் ஒருவருக்கொருவர் தீராப்பகை கொண்டோ

தொடர்ச்சி 11-ம் பக்கம்

# நீறு பூத்த நெருப்பு!

வழக்கறிஞர் என்.வி.என்.சோமு

"ஓடிவந்த இந்திப் பெண்ணே
கேள்!
நீ நாடிவந்த கோழை
நாடிதல்லவே!"

என்ற புரட்சிப் பாடல் பொங்கி வெடித்தது!

**எங்கெங்கு காணினும் இந்திக்கு எதிர்ப்பு முழக்கம்!**

1938—ல் தமிழ் மொழியைக் காத்திட—இந்திமொழியைஎதிர்த்து "தமிழன்தொடுத்த போர்" ஒரு தனியான வரலாறாகும்!

முதலமைச்சராக இருந்த ஆச்சாரியார் இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்கிவிட்டார்!

**தமிழகம் கொந்தளித்தது!**
**தந்தை பெரியார்!**
**தளபதி அண்ணா!**
**தமிழறிஞர் மறைமலை அடிகள்!**
**நாவலர் சோமசுந்தரபாரதியார்!**
**தமிழ்ப் பெரியார் திரு. வி. க.!**
**தமிழ் நெறிக்காவலர் மயிலை சிவமுத்து!**

போன்றோரெல்லாம் தோள்தட்டி துந்துபி முழங்கி போர்க்குரல் கொடுத்துவிட்டனர்!

வீட்டுக்கு ஒரு வீரன் வந்தால் போதாது! வீராங்கனையும் மொழிப் போரில் கலந்து கொள்ளவேண்டும்என்று ஆணை பிறப்பித்து விட்டார் தந்தை பெரியார்!

**சீறிவந்த புலியதனை முறத்தினாலே**
**அடித்துத் துரத்தினளே**
**சிங்காரத் தமிழ் மறத்தி**

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகளுக்குப் பொருள் கூறப் புறப்பட்டனர் தமிழகத்துத் தாய்மார்கள்! தங்கள்குழந்தைகளைக்கைகளில் ஏந்தியவாறு சிறை புகுந்தனர் எண்ணற்ற தாய்மார்கள். வேலூர் சிறைச்சாலையில் மூன்று மாதத் தண்டனை ஏற்றதாய்மார்களில் என் அன்னையார் திருமதி. புவனேசுவரி நடராஜன் அவர்களும் ஒருவர் என்பதும்—ஒன்றரை வயதுக்குழந்தையாக இருந்த நானும் அன்னையோடு சிறை நண்ணினேன் என்பதும் பெருமை சேர்க்கும் வரலாறாகும்! டாக்டர் தர்மாம்பாள், மூவலூர்மூதாட்டி, பண்டிதை நாராயணி அம்மையார், மலர் முகத்தம்மையார், பார்வதி அம்மையார் போன்ற பலர் போராட்டத்தில் பங்கு கொண்டனர்!

இந்த இந்திப் பிரச்சினைதான் காங்கிரசில் இருந்த என் தந்தையாரை திராவிடர் இயக்கத்துக்குக் கொண்டு வந்தது — சென்னை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியில் அவர் முன்மொழிந்த இந்தி எதிர்ப்புத் தீர்மானம் "காங்கிரஸ் தமிழர்களால்" தோற்கடிக்கப்பட்டது

தமிழகத்து மகளிர் தொடுத்த மொழிப் போரைக்கண்டு இந்திப் பெண் மிரண்டோடினாள்! 1938—ஆம்ஆண்டுஓடியஇந்திப் பெண் மீண்டும் 1948—ம் ஆண்டு தலைகாட்டினாள்!

மீண்டும் மொழிப்போர்! அறிஞர்அண்ணா சர்வாதிகாரியானார் — போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த தாய்மார்கள் பள்ளிகளின் முன்னாலே இந்தி எதிர்ப்பு மறியல் நடத்தினர்.

இன்றைய மகளிர் அணிச் செயலாளர் திருமதி. அலமேலு அப்பாத்துரையார், திராவிடர் கழகப் பிரமுகர் வேலாயுதம் அவர்களின் துணைவியார் தனலட்சுமி—தாமரைக் கண்ணி அம்மையார் மற்றும் பல தாய்மார்கள் சென்னையில் தொண்டை மண்டலம் பள்ளியின் முன்னால், இந்து தியலாஜிகல் பள்ளியின் முன்னால் மறியல் செய்தனர்!

1938—ல் ஆச்சாரியாரின் ஆதரவோடு நுழைந்த இந்தி 1948—ல் அவினாசிலிங்கனாரின் அரவணைப்போடு வந்தது!

மறியலில் கைது செய்யப்பட்ட தாய்மார்கள்—பல கர்ப்பிணிப் பெண்கள்—சென்னை நகருக்கு 30 மைலுக்கு அப்பால் கொண்டு விடப்பட்டு நடந்தே வரும்படி செய்யப்பட்டனர்! யாரும் வண்டியில் ஏற்றக்கூடாது! குடிப்பதற்குத் தண்ணீர் கூடக் கொடுக்கக் கூடாது. காங்கிரஸ் ஆட்சியின் இந்தகொடிய தண்டனையைத் தாய்க்குலம் தாங்கிக்கொண்டது! போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது!

மீண்டும் இந்திப் பெண் ஓடினாள்!
வெகுண்டோடினாள்!

மீண்டும் இந்தி வெறியர்களின் வாலாட்டம் 1963—ல் தலைதூக்கியது! கன்னித் தமிழகத்தின் தன்னேரில்லாத் தலைவர் கலைஞர் அவர்கள் போராட்டக் குழுத்தலைவரானார்! அறிஞர் அண்ணாவும் மற்றத்தலைவர்களும் அரசியல் சட்டத்தைக் கொளுத்தி கைதாயினர்!

அரசியல் சட்டத்தைக் கொளுத்தும்படி கழகத்தவரைத் தூண்டிவிட்டதாக கலைஞரும் என் தந்தையாரும் கைது செய்யப்பட்டனர்!

இந்தி தன் வாலைச் சுற்றிக்கொண்டது!

மீண்டும் 1965—ல் புதிய துணையோடு இந்தி நுழைந்தது! அரசியல் சட்டத்தின் பாதுகாப்போடு!

இம்முறை மாணவர் சமுதாயம் பொங்கி எழுந்தது! தமிழகத்தில் இந்திப் பேயை எதிர்த்து இரத்தஆறுஓடியது! மாணவர்களைத் தூண்டிவிட்டதாகக் கலைஞர் கைது செய்யப்பட்டு—பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்; மாணவர் கிளர்ச்சி அதிகமாகியது!

"1965—ல் ஏற்பட்ட மொழிக் கிளர்ச்சியில் தமிழகம் இரத்தத்தில் மிதந்தது! முதிர்ந்த அரசியல் விமர்சகர்கள் 1942—ல் நடைபெற்ற சுதந்திரப் போரைவிட 1965 மொழிப் போர் மிகவும் கடுமையானது என்று கருதுகின்றனர், "வெள்ளையனே வெளியேறு" என்ற போராட்டம் நகர்ப்புறத்தில் மட்டும் நடைபெற்றதென்றால், "இந்தி எதிர்ப்புப் போர்" பட்டிதொட்டியெங்கும் நடைபெற்றது.

— டெல்லியில் இருந்து வெளியாகும் "ஸ்டேட்ஸ்மேன்" என்ற ஆங்கில இதழ் 1965 கிளர்ச்சி பற்றி இப்படி எழுதியது

1965—ல் மூண்ட மொழிப் போருக்கு 1968—ல் பேரறிஞர் அண்ணா முற்றுப்புள்ளி வைத்தார்! தமிழக சட்டப் பேரவையில்—முதல்வர் என்ற முறையில் இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றினார்.

"To pay regard to the views expressed by the people and the students of Tamil Nad, this House resolves to drop the three language formula in all schools and introduce a formula for Tamil and English and scrap Hindi altogether."

"தமிழகத்து மக்களும் — மாணவர்களும் தெரிவித்த கருத்தின் அடிப்படையில், இந்தப் பேரவை, எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித்திட்டத்தைக்கைவிடுவதோடு தமிழ்—ஆங்கிலம் என்று இருமொழிக் கொள்கையைக் கொண்டு வருவதுடன் இந்தி மொழியை அறவே நீக்குகிறது."

அதற்குப் பின்னர் இந்தி அப்போதைக்கப்போது தலைகாட்டிய வண்ணமிருந்தது! தி.மு. கழகமும் அதன் தலைவர் கலைஞர் அவர்களும் அடிக்கடி இந்தி ஏகாதிபத்தியத்தை எச்சரித்த வண்ணமிருந்தனர்!

இந்தி படிப்பதை கட்டாய பாடமாக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்ட அரசு அலுவலர்கள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் 'முரசொலி' மாறன் அவர்களும்—அஞ்சலக ஊழியர் தலைவர் ஜி. இலட்சுமணன் அவர்களும் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து போராடினர்.

கன்னித் தமிழகத்தில் நுழைந்து நுழைந்து அடிபட்டுப்போன இந்தி இப்போது சற்று அதிகமாகவே வாலாட்டி வருகிறது!

எனவேதான் கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் மீண்டும் இந்தி எதிர்ப்புக்குரல் கொடுத்திருக்கிறார்!

இந்தி ஏகாதிபத்தியத்தின் வெறித்தன்மையை நாம் உணர்ந்த காரணத்தால்தான் "இந்தியை என்றும் எதிர்ப்போம்" என்று

(தொடர்ச்சி 11-ம்பக்கம்)

# 'கிருஷ்ண பக்தர்'களின் திருவிளையாடல்கள்!

'அகில உலக கிருஷ்ண பக்த சங்கம் (இஸ்கோன்)' என்ற பெயரில் சில 'போலி' பக்தர்கள் இயக்கம் நடத்தி வருகின்றனர். இவ்வியக்கத்தைப் பின்நின்று இயக்குபவர்கள் அயல்நாட்டைச் சார்ந்த உளவாளிகள் எனச் சொல்லப்படுகிறது.

இவ்வியக்கத்திலிருக்கும் உள் நாட்டு, வெளிநாட்டுப் பக்தர்கள் ஆங்காங்கே 'கிருஷ்ணன் கோவில்களை' கட்டியுள்ளனர்; தொடர்ந்து கட்டியும் வருகின்றனர்.

ஆனால்—

இவர்களின் செயல்களோ 'பக்தர்'களின் செயல்களாக இல்லை; 'பாதகர்'களின் செயல்களாகவே உள்ளது,

எடுத்துக்காட்டாக—

மேற்கு வங்காளத்திலிருக்கும் ஒரு கிராமத்தில் 'இஸ்கோன்' கட்டியுள்ள 'கிருஷ்ணன் கோவிலுக்கு' ஏராளமான வெளிநாட்டுப் பக்தர்கள் வந்தார்கள். அரை நிர்வாணத்தோடும் 'கஞ்சா' கிறக்கத்தோடும் வந்த அந்த பக்தர்கள் கிராமத்து மக்களை வீண்வம்புக்கு இழுத்ததோடு நில்லாமல். அம்மக்களை நோக்கிச்சுடவும் செய்தனர். அப்போது சிலர் படுகாயமடைந்தனர்.

அதேபோல் —

அண்மையில் நடந்த இன்னொரு நிகழ்ச்சியும் 'இஸ்கோன்'பக்தர்களின்'வண்டவாளத்தை வெட்டவெளிச்சமாக்கியுள்ளது. வடபம்பாயில் இருக்கும் ஜுகுவில் இவர்கள் கட்டிய ஒரு 'கிருஷ்ணன் கோவில்' இருக்கிறது. கீதாஎன்ற இளம் பெண் திரைப்படம் பார்த்துவிட்டு இரவு ஒன்பது மணிக்குமேல் கோவில் பக்கமாக வந்து கொண்டிருந்தபோது 'இஸ்கோனை'ச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரி அவளை வழிமறித்துக் கையைப் பிடித்து இழுத்திருக்கிறார்—இத்தனைக்கும் அந்தப் பெண்ணும் ஒரு 'கிருஷ்ண' பக்தைதான்!

அப்போது 'திலீப் மல்ஹோத்ரா' என்பவர் அப்பெண்ணை விடுவிக்கச் சென்றிருக்கிறார். ஆத்திரமடைந்த பாதுகாப்பு அதிகாரி, பொதுநிர்வாகி, பாதுகாவலர் எல்லோரும் சேர்ந்து பலமாகத் திலீப்பை தாக்கியிருக்கிறார்கள். தாக்குதலுக்காளான திலீப் மருத்துவமனையில் மாண்டு போனார்!

பக்திப்போர்வையிட்டு உலவும் அந்தக் கயவர்கள் மீது கொலை, கலகம் விளைவித்ததாக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

'இஸ்கோன்' நடத்தும் கோவில்கள் அனைத்தும் உண்மையில் அயல்நாட்டு உளவாளிகளின் இருப்பிடங்களே என அதிகாரிகள் உட்படப் பலர் பரவலாகப் பேசுகின்றனர். இருந்தும் ஏனோ தெரியவில்லை—மத்திய அரசு 'இஸ்கோன்' மீதும் அவர்களுடைய 'கோவில்கள்' மீதும் கைவைக்கத் தயங்குகிறது!

# நெஞ்சில் நிறைந்தவர்கள்!

# கொள்கை மறவன் கே. வி. கே. சாமி!

தென்பாண்டி வீரன், தூத்துக்குடித் தங்கம் கே வி. கே. சாமி மறைந்து இருபத்திரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. செப். 20 அவருடைய நினைவு நாளாகும். அதனை யொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

1947-ஆம் ஆண்டில் திராவிடர் கழக மாகாண (மாநில) மாநாடு தூத்துக்குடியில் நடைபெற்றது. ஐம்பதாயிரம் பேர் திரண்ட ஊர்வலத்தையும், இலட்சம் பேர் கூடிய மாநாட்டையும் அதுவரை தூத்துக்குடி கண்டதில்லை.

அவ்வளவு பெரிய மாநாட்டினைச் சீரும் சிறப்புமுற இரண்டு நாட்கள் நடத்தி முடிக்க, ஓடியாடி, சுற்றிச் சுழன்று பணியாற்றிய ஓர் உருவம் தலைவர் பெரியார் கண்களில் பதிந்துவிட்டது.

மாநாட்டின் இறுதியில் தந்தை பெரியார் முடிவுரையாற்றுகிறார்; அப்போது அந்த உருவத்தைப் பற்றி அவர் குறிப்பிடுகிறார்:—

"விடுதலை பெற்ற திராவிட நாட்டின் முதல் கவர்னர்—ஜெனரல் பதவியை வகிக்கத் தகுதி பெற்ற ஓர் இளைஞரை இங்கு கண்டேன்; அவர்தான் இந்த மாநாட்டில் தொண்டர் படைத் தலைவராகப் பணி புரிந்து, மாநாட்டின் வெற்றிக்கே முழு முதல் காரணமாகத் திகழும் தோழர் கே. வி. கே. சாமி"

தந்தை பெரியாரிடம் இவ்வளவு பெரிய பாராட்டுரையைப் பெற்ற கழகத் தொண்டர் வேறு யாரும் இருந்திருக்க முடியாது.

1949 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உறுதுணையாக இருந்த முன்னோடும் பிள்ளைகளில், முன்வரிசையில் இருந்தவர் செயல்வீரர் கே. வி. கே. சாமி.

தூத்துக்குடி என்றவுடனேயே நமது இயக்கத் தோழர்களின் நினைவுக்கு வருவது கே. வி. கே. சாமி என்னும் திருப்பெயர்தான்!

அதே பெயர்தான் 'சிம்ம சொப்பனமாக' இருந்தது அன்றைய காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்கு!

தூத்துக்குடிச் சிங்கம் கே,வி. கே. சாமி என்றதும், அவரது உருவம் எப்படியெல்லாம் இருக்குமோ என்று, அவரை நேரில் பார்த்தறியாதவர்கள் கற்பனை செய்து பார்க்கக் கூடும். ஆனால் அவர்களுடைய கற்பனைக்கும் — கே. வி. கே, சாமியின் உருவத்திற்கும் தொடர்பே இருக்காது.

பார்த்தால் பசு-பாய்ந்தால் புலி என்பார்களே, அதற்கு எடுத்துக் காட்டாகத்தான் கே வி. கே. சாமி திகழ்ந்தார்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்னும் நீதிக்கட்சி—சுயமரியாதை இயக்கம்—திராவிடர் கழகம் ஆகியவற்றிலெல்லாம் ஈடுபாடு கொண்டு, பின்னர் திராவிட முன்னேற்றக் கழகம் கண்டபோது அதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு எளிய தொண்டராகவும், தலைவர்களுக்கெல்லாம் தனிப்பெருந் தளபதியாகவும் விளங்கினார் கே. வி. கே. சாமி.

ஆம்! முப்பத்து இரண்டு வயதைத் தாண்டுவதற்கு முன்னரே, இத்துணைக் கீர்த்தியையும் சிறப்பையும் பெற்றிருந்தார் அவர்.

ஒடிந்து விழுவது போன்ற ஒற்றை நாடி உடம்புதான் அவருக்கு. வேண்டுமானால் 'சின்ன அழகிரி' என்றுகூடச் சொல்லலாம். அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி சாமி இந்த வயதில் இப்படித்தான் இருந்திருப்பார்!

அடக்கமும் பணிவும் அவரது உடன்பிறப்புக்கள்; என்றும் எளிய தோற்றம்; எல்லாரிடமும் இனிமையாகப் பழகும் இயல்பு; எதையும் சாதிக்கும் ஆற்றல்! இலட்சியத்துக்காக உயிரையே விடும்துணிவு! இத்தனையும் சேர்ந்த மொத்த உருவம்தான் கே. வி. கே. சாமி!


திராவிட இயக்கத்துக்குத் தென்பாண்டி மண்டலத்தில் கிடைத்த முத்தாக — விலை மதிக்கவொண்ணச் சொத்தாகத் திகழ்ந்தார் செயல் மறவர் சாமி!

அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் —நெல்லை மாவட்டச் செயலாளராகவும் இருந்து சிறப்பான பணியாற்றியிருக்கிறார்.

1953ஆம் ஆண்டு சூலை 15ஆம் நாள் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப்போராட்டத்தினையொட்டி அன்றைய காங்கிரசு ஆட்சி தொடுத்த 'தூத்துக்குடிச் சதி வழக்கில்' கடுமையான சட்ட விதிகளின் கீழ் குற்றங்கள் சுமத்தப்பட்டு, நீண்டநாள் காவலில் வைக்கப்பட்டிருந்தார் கே. வி. கே. சாமி; இறுதியில், வழக்கு மன்றத்தில் நீதி கிடைத்தது; சாமியும் விடுதலையானார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டராக மட்டுமின்றி, சிறந்த தொழிற் சங்கத் தலைவராகவும் இருந்து அரும்பணிகள் ஆற்றியிருக்கிறார்;

1952ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் மாநில



சட்டமன்றத்திற்குத் தூத்துக்குடித் தொகுதியிலிருந்து சுயேச்சை வேட்பாளராக (தி.மு.க. ஆதரவுடன்) நின்று, அந்நாள் காங்கிரசு அமைச்சரான திரு. ரோச்விக்டோரியாவை எதிர்த்துப் போட்டியிட்டார்; மிகக் குறைந்த வாக்குகள்வேறுபாட்டிலேயே அமைச்சர் ரோச்விக்டோரியா வெற்றிபெற முடிந்தது.

தோழர் சாமி வெற்றி வாய்ப்பை இழந்த போதிலும், எல்லாம் வல்ல காங்கிரசு அமைச்சரை எதிர்த்து எந்த வசதியுமில்லாது, சுயேச்சையாக நின்று இந்த அளவுக்கு வாக்குகள் பெற்றதே, தோழர் சாமியின் மகத்தான வெற்றியாக மக்களால் பாராட்டப்பட்டது.

அதற்கு அடுத்த பொதுத் தேர்தலில்—கே. வி. கே. சாமி நின்றிருப்பாரானால், அவரை எதிர்க்கவே தூத்துக்குடியில் ஆள் கிடைத்திருக்கமாட்டார் அன்றைய ஆளுங் கட்சிக்கு!

சாமியின் செல்வாக்குஅந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருந்தது! அதன் விளைவுதான் சாமியின் உயிருக்கே முடிவாக அமைந்தது

1956—ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்பதாம் நாள், சென்னையில் தி. மு. க. தலைமைச் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றது; சாமியும்வந்து அதில் கலந்து கொண்டுவிட்டு-அண்ணா அவர்களுடனும் ஏனைய தலைவர்களுடனும் அளவளாவிவிட்டுத் தூத்துக்குடிக்குத் திரும்பினார். — அதுதான் அண்ணா அவர்களை அவர் சந்தித்த கடைசிச் சந்திப்பு!

அதே செப்டம்பர் மாதம் இருபதாம் நாள் நள்ளிரவு 11—30 மணிக்கு தொலைபேசி மூலம் — தி. மு. க. தலைமை நிலையமான 'அறிவகத்'துக்குச் செய்தி வருகிறது—

" தூத்துக்குடி கே. வி கே. சாமி இன்றிரவு 9-30 மணியள வில் சைக்கிளில் தமது இல்லம் நோக்கி நண்பர் ஒருவருடன் சென்று கொண்டிருந்தபோது. குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டார் " என்று!

உடன் காஞ்சியில் இருந்த அண்ணாஅவர்களுக்குத்தொலைபேசி மூலம் செய்தி தெரிவிக்கப்பட்டது. செய்தி கேட்டுப் பதறிப்போன அண்ணா அவர்களும்,அன்றையதுணைபொதுச் செயலாளரான என். வி. என். அவர்களும் விமான மூலம் திருவனந்தபுரம் வழியாகத் தூத்துக்குடிக்குச் செல்ல முயன்றனர்; விமானத்தில் இடம் கிடைக்காததால் பயணம் தடைபட்டது!

பின்னர், மதுரை மாவட்டில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்த அன்றைய பொதுசெயலாளருக்கு தொலைபேசிமூலம் செய்தி அறிவிக்கப்பட்டது. உடன் அவர் கார் மூலம் தூத்துக்குடிக்கு விரைந்தார்.

மறுநாள் மாவீரன் சாமியின் இறுதிப் பயணம் நடைபெற்றது. அன்று தூத்துக்குடி நகரமே களையிழந்து—சோகம் கப்பியிருந்தது. கடைகளெல்லாம் அடைக்கப்பட்டன; ஆலைகள், அலுவலகங்களெல்லாம் மூடப்பட்டன; நகரமக்கள்—தொழிலாளர்கள் — கழகத் தோழர்கள் அனைவரும் செயலிழந்து செய்வதறியாது திகைத்தனர். தேம்பினர்!

செப்டம்பர் 30ஆம் நாள் நாடெங்கும் கே.வி. கே. சாமி இரங்கல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. அன்று தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு நெஞ்சம் நெகிழ ஆற்றிய உரை இன்றும் நம் நெஞ்சத்தைவிட்டு அகலவில்லை.

அப்போது அண்ணா அவர்கள் கூறியதாவது:

"நான் சாமியின் அனுதாபக் கூட்டத்திற்கா 'இங்கு வர வேண்டும்? சாமிக்குத் திருமணம் ஏற்பாடாகி-அதற்கு நான் வந்திருக்க வேண்டும்; சாமி வரப்போகும் தேர்தலில் நின்று-அவரை ஆதரித்துப் பேசுவதற்கு நான் வந்திருக்க வேண்டும்; தேர்தலில் அவர் வெற்றி பெற்றதும் அவரைப் பாராட்டுவதற்கு வந்திருக்க வேண்டும்; ஆனால் இதற்கெல்லாம வர வாய்ப்பில்லாமல், சாமி படுகொலைக்கு ஆளாக்கப்பட்டு-அவருக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக நான் இங்கு வருகிற துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது

பல துறையிலும் மக்களுக்கான காரியங்களைச் செய்வதில் 'சாமி சாமி' என்ற பெயர் தான் முன்னணியில் நின்றது! இப்படி, சாமி பெற்ற வளர்ச்சி கண்டு பொறாத சில மாபாதகர்கள்—சாமியின பணிகளைக் காணச் சகியாத படுபாதகர்கள்—இன்று, அவரைப் பலி கொண்டிருக்கிறார்கள்


இந்த வேதனையை ஊராராகிய உங்களால் தாங்கமுடியவில்லை — என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; இப்படி இருக்கும்போது சாமியைப் பெற்ற முதியவருக்கு என்ன சொல்லி ஆறுதல் கூறுவது?

அதனால்தான்,நான் 'என்னை உங்கள் மகன் சாமியாகஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொன்னேன்-சாமியின் தந்தையிடம்'"

தளபதி கே. வி. கே. சாமி போன்ற பல கொள்கைத் தங்கங்களைக் களபலியாகக் கொடுத்துத்தான் நமது கழகம் வளர்ந்திருக்கிறது.

கழகம் வளரக் கண்ணீரும் செந்நீரும் சிந்திய தியாகச் செம்மல்களையெல்லாம் நமது கழகம் மறக்காது. அவர்களெல்லாம் நமது நெஞ்சத்தில் என்றும் நின்று நிலவுவார்கள்.

வாழ்க கே. வி. கே. சாமி புகழ்!

தொலைபேசிஎண் கடை:33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு-விற்பனை நிலையம்
92.திருப்பரங்குன்றம் சாலை மதுரை

தனிச்சிறப்பு:சிலேபி,தெக்கத்திமிட்டாய்,அதிரசம், இனிப்புசேவு,பக்கவடா,மிக்சர்,முறுக்கு,கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே.தேவசகாயம்
கிளைகள்: 261.மேலமாசி வீதி, 70.சுவாமிசன்னதி
12.அழகர்கோவில் சாலை,72 CL வுன்ஹால்ரோடு, மதுரை.


# என்றுமே பெரியார் அண்ணா — நம் இதயத்தில் வாழ வேண்டும்

## கலைஞர் கருணாநிதி



கடந்த 17–9–78 அன்று சென்னை உம்மிடியார் பத்மாவதி திருமண மண்டபத்தில் சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் நடைபெற்ற முப்பெருவிழாக் கவியரங்கத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பாடிய தலைமைக் கவிதை.

எங்களுக்கு உயிராக வாய்த்த தமிழே!
திங்களுக்கும் மாசுண்டு —
தீந்தமிழே நீ களங்கமிலாக் கதிர் ஒளிதான்!
பொங்கலுக்குச் சுவை கூட்ட வெல்லம் வேண்டும் —
பொதிகைமலைத் தமிழே உனைவளர்க்க
நல்ல உள்ளம் வேண்டும் —
சங்கொலிக்கும் போர்க்களத்தில்
வீரமாய்த் தழைக்கும் தமிழே!
வெற்றியாய் விளையும் தமிழே!
அங்கொலிக்கும் தோல்விப்பேச்சு இனி எதிரிக்கேயன்றி
நமக்கல்ல என நாடதிர நகைப்பாய் தமிழே!
பங்குவைத்துத் தமிழர் வாழ்வைக் கூறுபோட
எங்குதித்த ஆட்கள் எலாம் வந்துவிட்டார்
கங்குகரை இல்லாமல் தமிழர்படை திரள வேண்டும்
கண்மூடி ஊமைகளை விழிக்க வைத்துப் பேசவைத்து
களம் நோக்கி நடை போடச் செய்யவேண்டும்... அந்தக்
கனல் கிளம்ப எங்கள் சொல்லில் செயலில்
கலந்திருந்து உறவாடும் புறப்பாட்டே!
கலிங்கத்துப் போர்ப்பாட்டே! கடற்கோளுக்கும் அழியாமல்
கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே
முன் தோன்றி மூத்த குடியின் பழம்பாட்டே! இன்று
நான் பாடும் புதுப்பாட்டுக்குச் சுவை வழங்கும்
மா, பலா, வாழைத் தமிழே! நீ வாழ்க நன்று!
முப்பெருங் கடலும் கண்டோம்
முத்தமிழ் மொழியும் கண்டோம்
முப்பெரும் மன்னர் கண்டோம்
முக்கொடி பறக்கக் கண்டோம்
முச்சங்கப் பெருமை கண்டோம்
முக்கனிச் சுவையும் கண்டோம் — இன்று
முப்பெரு விழாவைக் காண்போம்.
அண்ணா, பெரியார், கழகத்தை — நாம்
எண்ணுதிருக்கும் நாள் உண்டா?
கண்ணும் கொள்கை காப்பதற்கு
இந்நாள் சூளுரை மேற்கொள்வோம்;
பொன்னோ பொருளோ எதற்காக?
போலிகள் அலைவார் அதற்காக!
ஈரோடு பேன் நிறைந்த தலையாக
இருந்த நிலை மாற்றி எழிலாக்க
ஈரோட்டுச் சீப்பொன்று இல்லாவிட்டால்
இதற்குள்ளே தமிழ்நாடு மொட்டையாகப் போயிருக்கும்!
அவர் பிறந்த நாள்தான் தெரியும்; நட்சத்திரம் தெரியாது!
நட்சத்திரங்களைப் பற்றி அவர் கவலைப்பட்டதும் கிடையாது!
ஆனால் லக்கினம் என்னவோ சிம்மம்தான்!
அந்தச் சிம்மத்தின் முன்னே
சிறுநரிகள் வாலாட்டம் செல்லுபடியானதில்லை,
பொங்கும் எரிமலை அவர் — அதன்
நெருப்புக்குழம்பு வைதீகபுரியை
நோக்கிப்பாய்ந்து பெருகிற்று
அவர்ஒரு காட்டுத்தீ! அதில் சனாதன
மலைப்பாம்புகள் கருகிப் போயின!
கரைகளை உடைத்துப் படையெடுக்கும்
காட்டாற்று வெள்ளம் அவர் — அந்த
வெள்ளத்தில் பழம்பஞ்சாங்க மண் வீடுகள்
இருந்த இடம் தெரியவில்லை!
அவர் ஒரு போர்வாள்! அதன்
ஒரு வீச்சிலேயே புரோகிதம்
மூச்சற்றுப் போயிற்று!
சிந்துபாடும் சிற்றாறுகள் சீறிப்பாய்ந்தாலே
சீரழிவைத் தடுக்க முடியவில்லையே — அவரோ
பெரியாறு! அது சினந்து கிளம்பினால்
இதிகாச புராணங்களின் ஆணிவேரே
அறுந்து போகாதா?
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர் ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோட
பொங்கியே எழுந்தார் பெரியார் —
புதுமைக் காளைகள் கோடி உறுதியாய்க் கூறுகின்றார்
குருதிதான் பணயமென்று
இந்நாட்டான் இங்குவாழ்வான்
எந்நாட்டையும் புறங்காணும் புகழுடையான்
தமிழ்நாட்டான் தலைகுனிந்தான், இதோ நிமிர்ந்தான்
கொழித்து விட்ட உமிகள் தான்
இனிக் கொள்கையிலாக் கூட்டத்தார் —
பழித்துவிட்டால் பகுத்தறிவால்
பக்தி, மதம், புராணமெல்லாம்
பாழ் பாழ்! பாழ்! என
உதித்துவிட்ட புதுக் கருத்து — புரட்சிக் கருத்து
மிதித்துவிட்டால் புழுக்கூட புலியாகுமென்றால்
புலியென்ன ஆகும்? புரியாதார் இன்னும் கூட இருக்கின்றாரே!
அழுக்குருவப் பன்றி முதல் — சொறிநாய் —
கழுதைக் கூட்டம் — அனைத்துக்கும்
உரிமையுண்டு உயர்ஜாதிக்காரர்
உலவுகின்ற தெருக்களிலே ஓடி விளையாட; ஆனால்
கடவுளரின் கால் மூலம் பிரசவித்த
கடைக் கோடிச் சூத்திரனும் பஞ்சமனும்
அந்தத் தெருப்பக்கம் நடந்தாலே தீட்டு என்று
அநியாய நீதி உண்டு — அதன்பேர்தான் மனுநீதி — அதை
மறுப்பதற்கு ஆளில்லை; ஈரோட்டில் பெரியார்
பிறப்பதற்கு முன்னே அதனால்தான்
பாம்பைக் கண்டால் பிறகு அடி என்று சொன்னார்.
வேம்புக் கொள்கையின் மண்டைபிளந்தது அந்த அடியாலே!
வள்ளிக்கும் பார்வதிக்கும் பாமா, ராதா வகையறாவுக்கும்
வருடந்தோறும் திருமணத் திருவிழா நடத்துகின்றீர் —
போன ஆண்டு நடந்த திருமணத்திற்கு
ஆனகதி என்ன அய்யா என்று
அய்யாதான் கேட்டார் — அறிவின் கேள்விக்கு
இன்று வரை யார் அளித்தார் விடை?
ஒருநாள் கைலாசத்தில்
குளிக்கச் சென்ற பார்வதி
அழுக்கைத் திரட்டி அதற்கு உயிரூட்டி
ஆண்கள் வராமல் பார்த்துக் கொள் என்று
ஆடையின்றிக் குளிக்கின்ற அறையின் பக்கம்
அவ்வுருவைக் காவலுக்கு வைத்திருந்தாள்..........
அப்போது அவசரமாய் உள் நுழைந்த
ஆலகாலம் உண்ட சிவனை ஆண் என்று
அவ்வுருவம் தடுத்து நிறுத்தியதால்
சினம் கொண்ட சிவனாரும்
அழுக்குருவின் சிரத்தை அறுத்தெறிந்தார்
அது கண்ட பார்வதி கொதித் தெழுந்து
அவள் பெற்ற அழுக்குப் பிள்ளைக்கு உயிர் கொடுக்க
ஆணையிட்டாள் அவள் கணவன் சிவபெருமானிடம்!
ஆனையொன்று தெருவில் போயிற்று
அதன் தலையை வெட்டி அழுக்குருவில் பொருத்திவைத்தார்
அதுதானே ஆனைமுகப் பிள்ளையார் என்ற கதையுண்டு
அறிவீர் அன்றோ?........
அத்தனை பெரிய பிள்ளையைச் செய்யுமளவுக்கு
அன்னைபார்வதி உடலில் அழுக்கிருந்தால் அவள்
எத்தனை நாள் குளிக்காமல் இருந்திருக்க வேண்டும்?
இந்தக் கேள்விக்கு வித்திட்டுப்
புராணத்தைக் கேலிப்பொருளாக்கியவர்
ஈரோட்டுக் கிழவர் அன்றோ?
களையெடுத்த சமுதாயக் கழனியில்தான்
பொதுவுடைமைப் பயிர் வளருமென்று கருத்துச்
சுளையெடுத்துத் தந்தவரும் பெரியார்தானே!
"ஆத்மா" உண்டென அளக்கின்றவனே! பின்னர்
அடுத்த ஜென்மக் கதை எங்கே வந்தது?
ஆர்த்தது கேள்வி முரசொலியாய்
அடங்கினர் ஆமையாய் சனாதனிகள்!
இருட்டில் அசையும் செடி கொடி கண்டு
இருளன், காட்டேரி. பிசாசுகள் என்று
குருட்டுமதியினர் கூவிச் செத்தனர்
பேயுமில்லை பிசாசுமில்லை; பித்தர்களே!
சுருட்டும் ஆட்கள் சொல்வதை நம்பாதீர் என்று
சுயமரியாதைச்சுடர் கொளுத்தியது யார்?
அவர்தான் பெரியார்!
பச்சைத் தமிழன் என்று காமராசரை அவர்
இச்சையுடன் அழைத்தது எதற்காக?
பிற்பட்டோர் வாழ வேண்டும் அதற்காக!
காலமெல்லாம் நீடிக்க வேண்டும்
கழக ஆட்சியென அவர்
விரும்பியதும் எதற்காக? அவர்
கண்ட கனவெல்லாம் படிப்படியாய்
நிறைவேறும் என்பதற்காக!
திருவரங்கப்பெருமாள்போல் படுத்திருந்த
தமிழ் உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச் செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றோ?
தெருவரங்கம். கலையரங்கம்: இசையரங்கம், திரையரங்கம்
எல்லாமே "அம்மாமி அத்திம்பேர்" என்ற
"ஜலதரங்கம்"! அது மாற்றித்
தமிழரங்கம் தனியரங்கம் கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றோ?
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு;
பொங்குற்ற வேங்கை போல் நிமிர்கின்ற பார்வை உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு — வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு — அதில்
சாகும் வரை ஒளியுண்டு!
பம்பரமும் ஓய்வு பெறும் சுற்றிய பின்! — இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பம்பரமாய்ச் சுற்றி வந்தார்
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொலியாய்
இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைர நெஞ்ச வால்டேராய்
எம் தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்!
நம் சிந்தை அணு ஒவ்வொன்றும் நிறைந்திட்டார்!
அறிவுமழை பொழியும் — எழில்
வழியும்! இருள் கழியும்!
தெளிவு மிகு உரைகள் பல
ஒளிரும்; திறன் மிளிரும்!
கடலின் மடை — அலையின் ஒலி —
மலையின் முடி — தழுவும் முகில் வழியும்
அறிவுமழை பொழியும்
ஆணவங்கள் அழியும்
அடிமை முறை ஒழியும்
அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம் தின்பது போல் கழகத்தவர்க்கு!
அணுகுண்டு வெடித்தது போல் கயவர்கட்கு! அவர்
இளம் வயதில் மறையவில்லை —
நிறை வயது வாழ்ந்து விட்டே ஓய்வு கொண்டார் எனினும்
தாஜ்மகால் திடுமெனத்தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக் கட்டி ஆண்டுபல ஆயிற்றே
என்று ஆறுதல்தான் பெறுவோமோ?
தஞ்சைக்கோபுரம் சாய்ந்துவிட்டால்; அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல் எளிதாமோ? இவரோ
தஞ்சைக் கோபுரம் போல் உயர்ந்தவர்
தாஜ்மகால் போல் சரிதம் படைத்தவர்
எழுச்சி ஞாயிறுக்கு நூறாண்டு!
எழுபதாம் ஆண்டு பிறக்கிறது
எங்கள் அண்ணனுக்கு!......
அவர் கண்ட நம் கழகத்திற்கோ இன்று முப்பதாம் ஆண்டு!
புயற்காற்று ஒரு பூந்தென்றலைப் பிள்ளையாய்ப்பெறுவதுண்டோ?
அப்படிப் பிறந்த பிள்ளைதான் நம்அண்ணன் எனும்மந்தமாருதம்!
சண்டமாருதங்களையும் தன்
புன்னகையால் விரட்டுகின்ற மந்தமாருதம்!
"தாழ்ந்த தமிழகமே!" என அழைத்து நாம்
வாழ்ந்த பெருமையெலாம் வகைப்படுத்தி
ஆழ்ந்த கருத்துப் பேழையொன்றைத் தந்திட்டார்
கருத்துப்பேழையது! கறுப்புப் பணக்காரன்;
கழகத்தைக் கவிழ்ப்பதற்குக் கற்பனையில் தயாரித்த
காதறுந்த பேழையல்ல —
காஞ்சி அண்ணன்தந்த கற்பூரப் பேழையது!
பெரியாரின் வலக் கரமாய் — அறிவில்
வறியோரைக் கரையேற்றும் விசைப் படகாய்
சிறியோரின் பிழை பொறுக்கும் செங்கதிராய்
வெறியோரைப் பணியவைக்கும் வித்தகராய்
நெறியோடு முறையோடு அரசியல் நடத்திச் சென்று
'திருவோடு' ஒழிவதற்குத் திட்டம் சொன்னார் — இங்கே
'திரு'வோடு இருந்திட்ட சிலபேர் இன்று
தெருவோடு போகின்றார் நம்மைத் திட்டி
பருவோடு சண்டை போட்டால் நம் முகம்தான் கெடும்;
பரவாயில்லை என்று புனுகு போட்டால் பரு உதிரும்
ஈ. வெ. ரா பெரியாருடன் கருத்துமாறி
இன்னொரு கழகம் காண்பேன் என்று
கண்ணீர் பெருக்கிப் பிரிந்த போதும்
இரட்டைக் குழல் துப்பாக்கி போல் இருப்போமென்று
எதிரிகட்கு இடித்துரைத்தார் எங்களண்ணன்; இன்றோ
எதிரிகளைச் சேர்த்துக் கொண்டு
உடைவாளால் தாய்வயிற்றைக் கிழிப்பதற்கு
இழிகுணத்தார் ஓடுகின்றார்; விரைவில் முடமாவார்!
இன்றைக்கு நடந்தது போல் இருக்குதய்யோ கழகக்
கன்றை விட்டுப் பசுபிரிந்த அந்தக் காட்சி!
குன்றைத் துளைக்குமொரு வேல் எடுத்துக்
குறிபார்த்து நெஞ்சைக் கிழித்தது போல்
என்றைக்கும் நம்மைவிட்டுப் பிரியாத அண்ணன்
அன்றைக்கு மறைந்துவிட்டான்; அய்யகோ
ஆயிற்று எட்டொன்பதாண்டு!
'கொன்றை வேந்தன்' என அவ்வையின் பாட்டுண்டு — நம்
கொள்கை வேந்தனுக்கோ அழியாத பாட்டுண்டு!
பொங்கு கடல்நடையும் பூவையரின் மென்நடையும் தன்
புதுத் தமிழ் நடையில் காட்டியவன்
பொல்லாங்கு உரைப்போரை வாதத்தில் மாட்டியவன்;
பொடியெடுத்துப் போடும் நேரம்
புன்னகையாய் எதிரிகளைப்
பொடியாக்கி வாட்டியவன்
புழுநிக் குணம் படைத்தோரை ஓட்டியவன்
பொன் மகுடம் தமிழ்த்தாய்க்குச் சூட்டியவன்
எழுதுகோல் வைத்திருந்தான் அண்ணன் — அது
ஏமாந்த தமிழர்களின் தலையெழுத்தை மாற்றத்
தாளில் உழுத கோல்!
பாக்குக்கும் வெற்றிலை சுண்ணாம்புக்கும் அவர் வாய் சிவக்கும்
தாக்குதற்குத் தமிழர்களை இந்திமொழி வந்தால்
அவர் கண் சிவக்கும்.
'அக்ராசனாதிபதி'யை அவைத்தலைவராய் உலவ விட்டார்
அந்த நாள் பிரசங்கம்" — சொற்பொழிவாய் மாறிற்றின்று!
'நமஸ்காரம், கிமஸ்காரம்' எல்லாம்
நலமான தமிழிலே
நல்வணக்கமாய் மலர்ந்தது காண்!
தூய்மையாய்த் தமிழில்
கொடியேற்றுவிழா வந்தபின்னர்
துவஜா ரோகணத்துக்கு அங்கென்ன வேலை?
'வாய்மையே வெல்லும்' என்றதும்
'சத்யமேவஜயதே' கோபித்தா கொண்டது?
சங்கம் வளர்த்த தமிழில் அர்ச்சனை கூடாதென்று
சங்கராச்சாரியாரும் கூறுகின்றார்; இன்று
காஞ்சி பீடத்துப் போர்முறையைச் சந்திக்க
காஞ்சித் தலைவன் நமக்குக் கற்றுக்
கொடுக்காமல் போகவில்லை...
ஆண்டவர்க்கு ஆலயத்தில் அன்னை மொழியில்
அர்ச்சனை வேண்டாமெனில் அந்த
ஆண்டவரும் நமக்கு வேண்டாமென முரசறைவோம்!
அண்ணன் என்ற இளந்தென்றலுக்கு நாம் தம்பிகள்!
அதேநேரத்தில் பெரியார் என்ற
பெரும் புயலுக்கு நாம் பேரப்பிள்ளைகள்!
வடமொழித் திணிப்பாளர் நம்
வரலாற்றை மறக்கவேண்டாம்!
அடலேறுத் தமிழ் இனத்தின் கால்மிதித்தால்
நம் கால்கள் மொழிப் பகையின் தலைமிதிக்கும்
எச்சரிக்கை!
நாற்பதாண்டுக்கால மொழிப்போரின் சிப்பாய்கள் நாம்
நமக்கென்ன வந்த தென்று விதிவிலக்குப்பெற்ற வீரரல்ல!



நமது குலக்கொழுந்துகள் எல்லாம்
துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகி
நடுத்தெருவில் பிணங்களாய்ப் பூத்தபோதும்
தீக்குளித்து அணையா விளக்குகளாய் ஆனபோதும்
நாடு தழுவிய மொழிப்புரட்சிப் பூகம்பத்தில்
நல்லவேளை சிக்கிடாமல்
ஓடி ஒளிந்த மனிதர் சிலர் இன்று
ஒழிக்கின்றேன் இந்தியை என்று
ஒப்புக்குப் பேசி வீரத்தை விலைக்கு வாங்குகின்றார்
அவசர காலச் சட்டத்தின்போது
இந்திக்கே ஆதரவு என்று
அபசுரத்தில் பாடிய கட்சிக்காரர்கூட
ஆகாது இந்தியென கூறுகின்றார்...
பூனைகளே சிறுத்தையைப்போல் உறுமும்போது
சிறுத்தைகள் நாம் சினந்தெழுந்தால்
புவி நடுங்கப் போர் நடக்காதா?
சிறைச்சாலை, சித்திரவதை இவையெல்லாம்
கழகத்துக் காரனுக்குப் பழைய கதை!
ஆட்சிக்கு இந்தி மொழியாம் —
ஆண்டவன் பூஜைக்கு வடமொழியாம்
ஒரு தமிழன் மிச்சமாக உயிரோடிருக்கும்வரை
ஒப்பமாட்டான்! ஓதியமிலார் — முருங்கைக் கொம்புகள்
தப்பமாட்டா இரும்புத் தூண்களை மோதவந்தால்
பெரியாரும் அண்ணாவும்
இல்லாததாலே — நம்
பிரியம் போல் நாட்டை
நடத்தலாம் என்றெண்ணிடாதீர்!
அவர்கள் இருந்திருந்தால்
எங்கள் உணர்வெனும்
நெருப்பாற்றுக்கு அணைகளாய்
அமைந்திருப்பார்! மெழுகு
மரங்களே; நீங்கள் உருகி
வழியாமல் தப்பியிருப்பீர்!
மூக்கணாங் கயிறில்லா காளையின் முன்னே
முண்டா தட்டுவது முட்டாள்கள் வேலை!
பொறுமைக்கும் எல்லையுண்டு
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல
அமைதியாய் இருக்கச்சொன்ன அண்ணன்கூட
மறையாமல் இருந்திருந்தால்
"பொங்கி எழுக தம்பி" என்றே முழங்கிடுவார்
வேறென்ன?
நாட்டாட்சியா நடக்கின்றது இப்போது?
காட்டாட்சியன்றோ தொடர்கின்றது!
எதிர்க்கட்சியை
எப்படி முடக்கலாம்
என்பதே சிந்தனை.
எந்த இடமானாலும்
நம்மைப் பற்றியே நிந்தனை.
கொடும் வழக்கு, கொலை வழக்கு என்று
கடும் வழக்குப் போடுவதால் கழகம் மிரளுமாம்!
கோழி குத்திக் கோபுரம் சாயுமாம்! —
கங்கை யமுனை பெருக்கெடுத்து
வடபுலத்தில் நுழைந்தது போல்
கள்ளமது பெருக்கெடுத்துத்
தமிழ் நிலத்தில் பாயுதய்யா!
மது அரக்கனை விரட்டுவேன் என்று மார்தட்டுகின்றார்
அவன் என்ன அரக்கன் வடிவிலா இருக்கின்றான்
விரட்டுவதற்கு
ஆளுங்கட்சி அமைப்பாளனாகவன்றோ சிரிக்கின்றான்
கற்பழிப்பு, கொலை' களவு,
கண்ணீர்ப்புகை, துப்பாக்கிப்
பிரயோகம் — லஞ்ச ஊழல்
நிர்வாகக் குறுக்கீடு — நீதியிலும்
தலையீடு — அடுக்கடுக்காய்
ஆயிரம் சான்றுகள் — அதற்கெனத்
தனியாக ஒரு கவியரங்கம் நடத்தவேண்டும்.
அத்தனையும் மறைத்துவிட்டுப்
புத்தனைப்போல் ஏசுவைப்போல்
நடிக்கின்றார் நம்பச் சொல்லி!
மாடுகளை ஏலம் போடுவேன் என்று
மந்திரிகள் இதுவரையில் பேசக் கேட்டதுண்டோ?
இதோ
மாட்டுக்கார வேலன் பேசுகின்றார்
கட்டை வண்டி ஊர்வலங்கள் நடைபெற்றால்
கண்டிப்பாய் வண்டி நொறுங்குமாம்!
காளைமாடுகளும் ஏலம் போகுமாம்
கண்ணீர் விடும் விவசாயி கனற்பிழம்பாய் மாறிவிட்டால்

(தொடர்ச்சி 8-ம்பக்கம்)

# சிலம்புச் செல்வரின் தமிழினத்துரோகம்

தனக்கென்று ஒரு தனிக் கட்சியும் வைத்துக்கொண்டே வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதனோடு சந்தர்ப்பவாதமாக உறவாடித் தனக்கொரு பதவி தேடிக் கொள்வதையே "தமிழ்வளர்க்கும் பணி'' எனச் சொல்லிக் கொள்ளும் 'சிலம்புச் செல்வரின் தமிழ் இனத்துரோகம் வெட்ட வெளிச்சமாகி விட்ட நிகழ்ச்சி யொன்றை இங்கு விளக்குகிறேன்.

சென்னைக்கு வந்திருந்த ஆட்சி மொழிக் கமிஷன் தலைவர் பி. ஜி. கெர் அவர்களிடம் சாட்சியமளிக்கும் போது, இந்த ம. பொ சி. தன்னலத்துக்காகத் தமிழ்க் குலத்தின் மீதே பழி சுமத்தும் நச்சு மொழிகளைக் கக்கியிருக்கிறார். இதோ விவரம்: —

பி. ஜி கெர் :- இந்த ராஜ்யதில் சிலர், இந்தி மொழியே கூடாது என்று கிளர்ச்சி செய்கிறார்களே?

மா, பொ. சி :- இந்த ராஜ்யக்யம்—அதாவது தமிழகம் இந்திய யூனியனில் இணைந்திருக்கக் கூடாதென்பது அவர்களுடைய அரசியல் கொள்கை. அதனால்தான் அவர்கள் இந்தியை எந்த வடிவத்திலும் ஏற்க மறுக்கிறார்கள்!

—'செங்கோல்' 10—9—78;

—இப்படி மாபெரும் பொய்யை மனம் துணிந்து சொல்லியிருக்கிறார்! இந்தியை எந்த வடிவத்திலும் ஏற்க மறுப்பவர்கள் — அதாவது தி மு, கழகத்தினர் — இந்திய யூனியனில் இணைந்திருக்கக் கூடாதென்ற அரசியல் கொள்கையுடையவர்களாம்!

அப்படியானால், அத்தகைய நோக்கமுடைய தி. மு. கழகத் தோழமையுடன்—கருப்பு சிவப்பு இருவண்ணக் கொடியுடன்—உதய சூரியன் சின்னத்திலேயே 1967—சட்டமன்றத் தேர்தலில் தியாகராய நகர் தொகுதியில் இந்த மா. பொ. சி. போட்டியிட்டு வன்றாரே! அப்பொழுது இந்தப் புத்தி எங்கே போயிற்று? அன்றைக்குத் தி. மு. க. ஆதரவினால் கிடைத்த ஒரு எம்,எல். ஏ. பதவிக்காகவே இவரும் அந்தப் பிரிவினைக் கொள்கையை ஒப்புக்கொண்டிருந்தாரா? அதுமட்டுமல்ல;

1971 சட்டமன்றத் தேர்தலில் அதே தி. மு. க. கொடியுடன் உதய சூரியன் சின்னத்துடன் மயிலாம்பூர்த் தொகுதியில் போட்டியிட்ட ம. பொ. சி. திருமதி அனந்தநாயகியிடம் தோல்வியடைந்தாரே! அப்பொழுதாவது தி. மு. கழகம் "பிரிவினைக் கொள்கையுடையகட்சி'' என்றஞானம், இந்தச் சிவஞானத்திற்குப் பிறந்ததா?

மயிலை வீதியோரத்திலே மண்ணைக் கவ்விக்கொண்டு கிடந்த ம. பொ. சி. யைத் தூக்கி நிறுத்தி, கழுவிக் குளிப்பாட்டி, நடுவீட்டுக்குள் வைத்து, 'கொல்லை வழியாகவே எம் எல், சி. யாக்கிய கலைஞர், மேலவைத் துணை தலைவர் பதவியும் கொடுத்து வாழ வைத்தாரே! அப்பொழுது கூட, இந்தத் தி. மு. கழகம் பிரிவினைநோக்கமுள்ள கட்சி என்பது இவர் மூளையில் உறுத்தவில்லையா? அப்படி உறுத்தியிருந்தால், தி. மு, கழகம் கொடுக்சின்ற எம். எல். சி. பதவியும் வேண்டாம்—துணைத் தலைவர் பதவியும் வேண்டாம் என்று ம. பொ. சி. மறுத்திருக்கலாமல்லவா;

அப்பொழுதெல்லாம். கிடைத்தவரையில் ஆதாயம் என்ற எண்ணத்துடன் பிச்சைப் பதவிகளை ஏற்றுக்கொண்டு,"தி, மு. கழகம் பிரிவினைக் கொள்கையைத் துறந்து விட்ட கட்சி இந்திய ஒருமைப்பாட்டை விரும்புகின்ற கட்சி'' என்று மேடைக்கு மேடை ம. பொ. சி. வாய் குளிரப் பேசியதெல்லாம் படுபொய்யா? அல்லது. "இந்திய யூனியனில் இணைந்திருக்க விரும்பாதவர்கள் அவர்கள்'' என்று இப்பொழுது கூறுவது தான் பொய்யா? இவ்விரண்டு வகைப் பேச்சில், ஏதாவதொன்று பொய்யாகத்தானே இருந்தாக வேண்டும்!

இப்படிச் சமயத்திற்கேற்றவாறு கருத்தைமாற்றிக் கதையளப்பதுதான் இவர் காந்தியடிகளிடம் கற்றுக்கொண்ட

—★ பாமணி ★—

சத்திய போதனையா? தி. மு' கழகம் வீசியெறிந்த பதவியின் உதவியால். ஒன்பதாண்டுக் காலத்தில் ஒன்றுக்கு மூன்றாக வசதிகளை வளர்த்துக் கொண்டபின். இப்போது "தி. மு. க. பிரிவினை நோக்கமுள்ள கட்சி', என்று வாயாரப் பழி சுமத்துவதுதான் வள்ளலார் வகுத்த வழிமுறையா? சிலம்பு கா·ட்டும் செந்நெறியா?

'ஏதோ, வயதான காலத்தில் வளமானபிழைப்புத்தேடுவதற்காக இடம் மாறினேன்' என்பதை இவர் சொல்லாமலே மவுனமாக இருந்தாலாவது நசம்பொறுத்துக்கொள்ளலாம்—புரிந்து கொள்ளலாம்! குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறிப்பதுபோல் ம. பொ. சி. சாமார்த்தியம் பேசினால், தமிழ் மக்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாதென்ற எண்ணமா?

இந்தச் சந்தர்ப்பவாதியின் சமயோசிதப் பேச்சு ஒருபுறம் இருக்கட்டும். "அண்ணாவின் இருமொழித்திட்டம்தான் எங்கள் உறுதியான கொள்கை!'' என்று அடிக்கடி தம்பட்டமடித்துக் கொண்டிருக்கும் அ.தி.மு.க.வினரும், எம். ஜி. ஆரும் இப்படி "இந்திய யூனியனில் இணைந்திருக்க விரும்பாதவர்கள்தான் இந்தியை எதிர்க்கிறார்கள்!'' என்று பகிரங்கமாகவே வாக்குமூலம் கொடுத்துள்ள ம.பொ.சி.யை இன்னமும் மறுத்துப்பேசாமல் அவரை மேலவைத் தலைவராவவே உயர்த்தி வைத்திருக்கிறார்களே! இவர்கள்உண்மையில் அண்ணாவின் வழியில் செல்பவர்கள்தாமா? அல்லது, இனத்துரோகிக்கே துணைபுரியும் இளிச்சவாயர்களா? அல்லது, ம.பொ.சி.யுடன்சேர்ந்து கொண்டு, மறைமுகமாகவே தமிழுக்குக்குழிதோண்டும் நயவஞ்சகர்களா என்பதுதான் நமது கேள்வி!

## [கலைஞர் கவிதை 7-ம் பக்கத் தொடர்ச்சி]

மாடுகளை ஏலமிடும் போக்கெதிர்த்து
மந்திரிகளை ஏலமிடத் துணிவானே—
நெல்லிக்காய் மூட்டையென்று தமிழர்களை
நினைததுவிட்ட காரணத்தால்
நெஞ்சழுத்தம் வளர்கிறது; நறுக்கவேண்டும்
எல்லாத் தமிழர்களும் எப்போது கூடுவது!
பொல்லாதார் ஆதிக்கம் எப்போது புறங்காணச் செய்வது?
எழுநதிடும் கேள்வி, எனக்குத் தெரியும்
கரிசல் உண்டு மண்ணிலே
களைகள் உண்டு கழனியில்
பதர்கள் உண்டு நெல்லிலே
துரோகி உண்டு தமிழரில்
தொலைவில் இலலை அருகிலே
பதவிகள் வேண்டும்; தினம்
பல்லக்குச் சவாரி வேண்டும் — அதற்காகப்
பகைவரின் பாதத்தைக் கழுவிட வேண்டும்—எனில்
பாய்ந்தோடி முந்திக்கொள்ளும் வீடணர்கள் காணும் சுகம்
பரதைடர்கள் ஆடவரின் பிணத்தைத் தழுவிக்
காசுபெறும் சுகம்போல்தானே!
—அதனால்—
தமிழ்த் துரோகிகளைக் கண்டு
அஞ்ச வேண்டாம் —அவர்கள்
துருப்பிடித்த ஆணிகள்!
அண்ணா பெரியார் படங்களைக் கூட
அந்த ஆணிகள் தாங்கமாட்டா!
அவர்கள் கொள்கைகளை
எங்ஙனம் தாங்கிடுவார்?
கோழைகள் விலகட்டும்
வீரர்கள் தொடரட்டும்
கொட்டுக முரசென்று
இனமுழக்கம் செய்திடுவோம்
இழிவுகளை அகற்றிடுவோம்.!
அய்யா ஏற்றியது அறிவுவிளக்கு—
அதனைக் காற்றில் அணையாமல்
காத்த கரம் அண்ணன் கரம்—
மீண்டும் பெருங்காற்று
அண்ணன் கரமில்லை —அதற்குப் பதிலாக
ஆயிரம் லட்சம் கோடியென்று
கரங்கள் நீளட்டும்—அந்தக் கரமனைத்தும்
அண்ணனுக்குச் சொந்தமான
கரங்களேதான்! தூய
தம்பிகளின் கரம்—
தொண்டர்களின் கரம்!.........
அவையனைத்தும் அண்ணாவின் கரம்!
அகரம் தமிழுக்கு முதல் எழுத்து
அண்ணாவின் பெயரோ தமிழர்க்கு முதல் எழுத்து
அந்த முதல் எழுத்துத் தலைவர் தந்தது முன்னேற்றக் கழகம்!
முன்னேற்றம் தமிழர்க்கு வாய்ப்பதெனில்
முப்பெரும் விழா மட்டும் போதாது......
இப்பெரும் நாடு காக்க நமது மொழி காக்க
இன்றைக்கே சூளுரை ஏற்க வேண்டும்.
பெரியாரின் துணிவுதனைப் பெறுதல் வேண்டும்
பேரறிஞர் அண்ணாவின் தெளிவுதனை உணரவேண்டும்
பேரெதிர்ப்புக்கு அஞ்சாத உறுதிவேண்டும்—
ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டுமே என்று
உயிர்த்தித்திப்பை எண்ணாத தியாக உள்ளம் வேண்டும்—
ஊடுருவும் துப்பாக்கி ரவைகளுக்குத் தீரநெஞ்சைத்
திறந்து காட்டல் வேண்டும்—
"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை;"
என்ற புரட்சிக்கவியின் திண்மைவேண்டும்........
புரட்டுக்களை உருட்ட வேண்டும்!
புதுமைகளை வளர்க்க வேண்டும்!
போலிகளைப் பொசுக்க வேண்டும்—
போர்க்குண மறவராய் உலவ வேண்டும்—
என்றுமே பெரியார் அண்ணா—நம்
இதயத்தில் வாழ வேண்டும்.

★

## புனித ராஜ்யத்தில் பயிர் மேயும் வேலிகள்

"அம்பாப்பூர் கிராமத்தில் கலவரம்செய்ததாகவும், நான்குபெண்கள் உட்பட இருபத்தேழு பேருக்குக்காயம் விளைவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருக்கும் அரியலூர்போலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பதினைந்து போலீசார் மீது அரியலூர் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி இன்று விசாரணையைத் துவக்கினார்—''

இவ்வாறு செப்டம்பர் பதினெட்டாம்தேதி ஒரு செய்தி வெளியிட்டுள்ளது 'தினமணி.'

அதே நாளன்று —

"ஒரு வியாபாரியிடமிருந்து ஐம்பதுரூபாய் ரொக்கத்தை வழிப்பறி செய்ததாக மதுரையில் ஒரு போலீஸ் கான்ஸ்டபிளும், போலீஸ் கான்ஸ்டபிள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட மற்றொருவரும் கைது செய்யப்பட்டனர்.''

— என்ற இன்னொரு செய்தியையும் வெளியிட்டுள்ளது.

'வேலியே பயிரை மேயும்' இந்த நிலை நடிக முதல்வரின் 'புனித ராஜ்யத்தில்' ஒருதொடர்கதைபோல் நீண்டுகொண்டே போகிறது.

உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்புத் தந்து சட்டம், ஒழுங்கு அமைதியைக் காக்க வேண்டிய போலீசார் செயல்படும் 'அழகு' கண்டு ஊரே சிரிக்கிறது.

'ஒரு தவறு செய்தால்-அதைத் தெரிந்து செய்தால் ... அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன்...'' என வெள்ளித்திரையில் வாயசைத்த நடிகமுதல்வர், தவறு செய்யும் போலீசாரையும், அதிகாரிகளையும் 'களை' எடுக்க முன்வருவாரா?


# நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

# நடிக முதல்வர் போடாத வேடம்!

"நான் எல்லா மாறு வேடமும் போட்டுவிட்டேன். பெண்வேடம் என்றால் அதுவும் போட்டாகிவிட்டது. இனி மாறுவேடம்போட முடியாது"

மதுரை அருகே இருக்கும் காந்தி கிராமத்தில் அண்மையில் இவ்வாறு பேசியுள்ளார் நடிக முதல்வர். எல்லா மாறுவேடங்களும் போட்டு விட்டதால், இனிப் புதிதாகப் போடுவதற்கு வேறு மாறுவேடம் எதுவும் இல்லையே என்ற அவருடைய குறையைப் போக்க சிலபுதிய வேடங்களை — இதுவரை அவர் போடாத வேடங்களை அவருக்குச் 'சிபாரிசு' செய்கிறோம்; மக்களின் குறைகளைப் போக்குவது மன்னனின் கடமை என்பார்கள். அதே போல் முதலமைச்சரின் குறைகளைப் போக்குவதும்மக்களின் கடமையாகக் கருதி இந்த ஆலோசனையை வழங்குகிறோம்.

## நீரோ வேடம்

இராஜா தேசிங்காக, பிருதிவி இராஜனாக,நாடோடி மன்னனாக, வேடமிட்டுப் புகழ்பெற்ற நம்முடைய நடிக முதல்வர் நீரோ மன்னன் வேடத்தை இதுவரைபோட்டதில்லை. புயலாலும், வெள்ளத்தாலும் தமிழகமக்கள் பாதிக்கப்பட்டுப் பரதவித்துக் கொண்டிருந்தபோது 'பங்காரா' நாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்த நடிக முதல்வருக்கு நீரோ மன்னன் வேடம் வெகு பொருத்தமாக இருக்கும்

(உரோம் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது நீரோ மன்னன் பிடில் வாசித்து மகிழ்ந்ததை நினைவில் கொள்க)

## துக்ளக் வேடம்

கறுப்புக்கொடி காட்டியவர்கள் மீது கொலை வழக்குப் போடுவது, குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட அதிகாரிகளைத் தண்டிக்காமலிருப்பது-தன்னால் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் தன்னிடமே வந்து விட்டதால் அவர்களுக்கெல்லாம் 'தண்ணீர்' தெளித்து புனிதவான்களாக்கி விட்டு கலைஞர் மீது மட்டும் வழக்கு என மிரட்டுவது — போன்ற 'தர்பார்' நடத்தும் நடிகமுதல்வர் துக்ளக் வேடத்தில் நன்றாக மிளிருவார் என்பதில் சந்தேகமில்லை.

தலைநகரத்தை மாற்றுவது நாணயங்களைத் தோலால் அடிப்பது போன்ற துக்ளக்கின் 'ஐடியாக்களை' மிஞ்சும் வண்ணம்—போஸ்ட் ஆபீசில் கடன் தருவது, கார்டு விலைகளைக் குறைப்பது, பயிர் இன்சூரன்ஸ், விவசாயிகளுக்கு மாதச்சம்பளம், அத்துடன் போனஸ்; ஒரு தடவை விபச்சாரம் செய்தால் மன்னிப்பு... அடுத்த முறை விபச்சாரம் செய்தால் தண்டனை போன்ற 'ஐடியாக்களை' வாரி வழங்கிய நடிக முதல்வரைவிட வேறு யாரும் 'துக்ளக்' வேடத்திற்கு இலாயக்கில்லை என்பது நமது ஆணித்தரமான கருத்து.

(நடிகர் 'சோ' மன்னிப்பாராக)

## பிரதமர் வேடம்

இப்போதெல்லாம் அ. தி. மு. க வினர் மேடை தோறும் முழங்க ஆரம்பித்து விட்டார்கள்.

"இந்தியாவின் பிரதமர் ஆகும் தகுதி எங்கள் புரட்சித் தலைவருக்கு இல்லையா?" என்று.

அப்படியே நடிக முதல்வர் பிரதமர் ஆகக் கூடும் என்று சிலர் சோதிடம் கூறுகிறார்களாம். இந்திய அரசியலில் என்ன நடக்கும்,என்ன நடக்காது என்பதைச்சொல்ல முடியாது என்பதால் இந்த அதிசயம் நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆகவே—

பிரதமர் வேடத்தை இப்போதே போட்டு ஒத்திகை பார்த்துக்கொள்ளலாம் நடிக முதல்வர். இந்த வேடம்போட அதிகசிரமம்எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. 'புஷ்குல்லா'விற்குப் பதிலாக 'கதர்க் குல்லாய்' அணிய வேண்டும்; 'டைட்'டான சில்க் சட்டைக்குப் பதில் நீண்ட கதர்ஜிப்பா அல்லது கதர் கோட்டு அணிந்தால் போதும்; மண்ணில் புரளும்படியானபட்டு எட்டு முழ வேட்டிக்குப் பதில் இறுகக் கவ்வும் நீண்ட 'கால்சராய்' அணியவேண்டும். இந்த ஆடை அலங்காரங்கள் இருந்தால் தான் வடவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்.

(நேரு, சாஸ்திரி, போன்ற மிகப் பெரிய அரசியல்வாதிகள்,தியாகிகள் அமர்ந்தபுனிதமான பீடத்தில் நடிக முதல்வரா என யாரும் மூக்கின்மீது விரல் வைக்க வேண்டாம். ஓமந்தூரார், காமராஜர், பக்தவத்சலம், அண்ணா, கலைஞர் அமர்ந்த இடத்தில் இப்போது நடிக முதல்வர் அமரவில்லையா என்ன?)

## கோயபல்ஸ் வேடம்

'ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால் அதுவே மெய்யாகிவிடும்' என்ற புதிய சித்தாந்தத்தைக் கோயபல்ஸ் கண்டுபிடித்ததைப் போல் முன்னுக்குப் பின் முரணாகப்பேசினால் எந்த விவகாரத்திலும் மாட்டிக் கொள்ளாதுதப்பித்துக்கொள்ளலாம் என்றபுதியசித்தாந்தத்தைக் கண்டுபிடித்திருக்கும் நடிகமுதல்வருக்குகோயபல்ஸ் வேடம் மிகவும் பிரமாதமாக இருக்கும்.

திரையரங்கில் மன்னனாக வந்தவர் அரசியலரங்கில் முதல்வராக இருக்கும்போது அரசியலரங்கில் 'கோயபல்ஸ்' ஆக இருக்கும் அவரே திரையரங்கிலும் 'கோயபல்சாக' வேடமிட்டால் ஜோராக இருக்கும்.

விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்தினால் 'நசுக்குவேன்... ஒடுக்குவேன்... உடைப்பேன்' என சர்வாதிகாரத் தனமாகப் பேசும் நடிக முதல்வருக்கு ஹிட்லர்வேடத்தைச் சிபாரிசு செய்யலாமா என முதலில் யோசித்தோம். ஹிட்லர்என்னதான் சர்வாதிகாரி என்றாலும் அவன்ஒருநெஞ்சுரம் படைத்த வீரன் என்பதை மறுப்பதற்கில்லை. நடிக முதல்வரிடம் நெஞ்சுரமோ, வீரமோ மருந்துக்குக்கூட இல்லை என்பதால் அந்த வேடம் அவருக்குப் பொருந்தாது என நினைத்து இந்தயோசனையைக் கைவிட்டு விட்டோம்.

பின்குறிப்பு: இப்போதைக்கு இந்த நான்கு வேடங்களைத் தான் குறிப்பிட முடிந்தது. தேவைப்பட்டால்— அதாவது நடிக முதல்வருக்குத்தேவைப் பட்டால் அவர் போடாத வேறு சில புதிய வேடங்களை யோசித்துச் சொல்கிறோம்.

★★★★★★★★★★★

சண்முகபுரம்
ரா. பாலகிருஷ்ணன்

★★★★★★★★★★★

★

## மறக்கவே முடியாத தென்னவன்

*புலவர் வெற்றியழகன்*

**எடுப்பு :**

அண்ணா என்றொரு மனிதர் — அவர்
அவனிக்கு வாய்த்திட்ட புனிதர்! — அண்ணா

**தொடுப்பு :**

கண்ணாய்த் தமிழரைக் காத்தார் — தமிழர்
காவியம் நயம்பட யாத்தார்! — அண்ணா

**முடிப்பு :**

இரவு பகலாய் உழைத்தார்
ஈடு இணையின்றித் தழைத்தார்
உறவுடன் பலரையும் அழைத்தார்
உண்மை அன்புடன் அணைத்தார்! — அண்ணா
அடுக்கு மொழியினை அளித்தார்
அறிவுக் குளத்தினில் குளித்தார்
எடுத்த செயலினை முடித்தார்
இதயத்தில் இடத்தினைப் பிடித்தார்! — அண்ணா
குறளின் வடிவினைப் பெற்றார்
குறள்வழி அறிவினைக் கற்றார்
அறிவின் உச்சியில் நின்றார்
ஆணவப் போக்கினை வென்றார்! — அண்ணா
கடமை கண்ணியம் சொன்னவர்
கட்டுப் பாடுடன் நின்றவர்
மடமை நீக்கிய மன்னவர்
மறக்கவே முடியாத தென்னவர்! — அண்ணா

## தலைமை அமைச்சரின் தவறான கணிப்பு

இந்திய மக்களில் நூற்றுக்கு ஐம்பது பேர் இந்தி பேசுபவதாகத் தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாய் சில மாதங்களுக்கு முன் குறிப்பிட்டுள்ளார். விரைவிலேயே ஐம்பது பேர் என்பதை அறுபது பேராக உயர்த்திவிட்டார்.

நம்முடைய தலைமை அமைச்சர் இந்தப்'புள்ளி விவரத்தை' எங்கிருந்து பெற்றார் என்பது நமக்குத் தெரியவில்லை. இந்திய மக்களில் நூற்றுக்கு அறுபதுபேர் இந்தி பேசுகிறார்கள் என்பதை அவர் நம்புகிறார் என்றால், தென் மாநிலங்கள் அல்லாது — மகாராஷ்டிரம், குஜராத். ஒரிஸ்ஸா மேற்கு வங்கம் திரிபுரா, அஸ்ஸாம், காஷ்மீர், பஞ்சாப் — வாழ் மக்களை அவர் பயங்கரமாகப் புறக்கணிப்பவராகிறார். நம்முடைய தலைமை அமைச்சர் அந்த மாநிலங்கள் தமக்கேயுரிய வட்டார மொழிகளைப் பெற்றிருக்கின்றன என்பதைக் கூட நினைத்துப் பார்ப்பவராகத் தெரியவில்லை. அவைகளில் பெரும்பான்மையான மொழிகள் இந்தியை விட வலுமிக்கவைகள்

இந்தியை எதிர்ப்பவை தென்மாநிலங்கள் மட்டுமே என்ற ஒரு 'படத்தை' வரைந்து காட்ட அவர் முயற்சிக்கிறார்; இராஜஸ்தான் இந்தி பேசும் மாநிலமென்று தவறான தகவல் தரப்படுகிறது. இந்தி வெறியர்களின் சுயநலத்துக்காக, அரசியல் சட்டத்தில் இராஜஸ்தானி மொழிக்கு அங்கீகரிக்கப்பட்ட உரிமை அநியாயமாகப் புறக்கணிக்கப்படுகிறது.

நம்முடைய தலைமை அமைச்சர் மேலும் சொல்கிறார் 'இந்திய மக்களில் நூற்றுக்கு இருவர்தான் ஆங்கிலம் அறிவர்' என்று. இந்நிர்மானத்திற்கு அவர் எப்படி வந்தார் என்று தெரியவில்லை.

ஆங்கிலம் நன்றாக அறிந்த பெரும்பான்மையான இந்தியர்கள். 'ஆங்கிலமறிந்தவர்கள்' எனக் கருதப்படுவதைக் காட்டிலும் — இந்தியில் ஒரு சில வார்த்தைகள் மட்டுமே பேசத் தெரிந்தவர் இந்தி அறிந்தவராகக் கருதப்படுகிறார்

பி. வி ஆர். ராவ்,
'விங் கமாண்டர்'
பெங்களூர்

*(27—8—78 'சண்டே' ஆங்கில வார இதழில் எழுதிய கடிதம்)*

## பெரியாரின் சீரிய பண்பு!

நாற்பது. ஐம்பது வருடப் பொதுவாழ்வில் பெரியார் எந்தக் கூட்டத்திற்கும், நிகழ்ச்சிக்கும் காலம் தாழ்த்திச் சென்றதாகத் தெரியவில்லை. மாலையில் கூட்டம் என்றால் காலையிலே போய் விடுவார். வருவாரோ, வரமாட்டாரோ என்ற ஐயப்பாட்டிற்கே இடம் இருக்காது,— கூட்டம் அல்லது நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்களுக்கு.

ஒரு சமயம் (1953) தாத்தையங்கார் பேட்டையில் ஒரு பொதுகூட்டத்தில் கலந்து கொள்ள பெரியார் திருச்சியிலிருந்து புறப்பட்டு வந்தார், நொச்சியம் (திருச்சியிலிருந்து மூன்று மைல்) என்ற இடத்தில் கார் (VAN) பழுதாகி விட்டது. பிறகு அங்கிருந்து பஸ்ஸில் முசிறி வந்து பிறகு சரக்கு ஏற்றும் போக்குவரத்துலாரி ஒன்றின் மூலம் குறித்த காலத்திற்கு ஒரு மணி முன்னதாகவே வந்து சேர்ந்துவிட்டார். இந்த வயதிலும் மற்றவர்களுக்கு அசௌகரியம் ஏற்படக்கூடாதே என்று தன் சௌகரியத்தையும் பொருட்படுத்தாமல் லாரியில் வந்த விஷயம் கேள்விப்பட்டு நானும் மற்ற தோழர்களும் அசந்தே போனோம்.

— பி. இரங்கசாமி பி. ஏ. பி எல்

# எனது துடிப்பு!

கவியரசு முடியரசன்

சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்' என்றே
ஓதியஓர் பாரதியும் செத்து விட்டான்;
உட்புகுந்த சாதிகளோ சாக வில்லை;
வேதியர்கள் தாம்வாழ வகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள்தூள் என்று
மோதினன்நம் பாவேந்தன்; வீதிதோறும்
முளைப்பதலால், தூளாக வில்லை யிங்கே

ஒருருவம் இல்லாத கடவுள் பேரால
ஒவ்வாத பகைமூட்டும் மதத்தின் பேரால்
சீரழிவு பெற்றுவரும் சமுதா யத்தைச்
செப்பனிட வந்தஒரு பெரியார் இங்கே
ஆறறிவுப் போர்தொடுத்து மாண்டபின்பும்
அர்த்தமிலா எந்தமதம் அழிந்த திங்கே?
ஆரவர்போல் போராட வல்லா ரிங்கே?
அய்யகோ என்நெஞ்சம் துடிது டித்தேன்,

முன்பிருந்த வரலாற்றை எடுத்துச்சொல்லி
முத்தமிழின் சிறப்பெல்லாம் தொகுத்துக் கூறிப்
பின்பிறந்த நாகரிகம் உலகில் ஓங்கப்
பிறரெல்லாம் முயல்வதைப்பார் என்று காட்டி
என்புருக நாளெல்லாம் பேசி அண்ணா
எழுச்சிபெற முன்னேற்றக் கழகங்கண்ட
பின்புமிந்தத் தமிழினத்தார் நிமிர்ந்து நிற்கப்
பின்வாங்கும் நிலைகண்டு மனந்து டித்தேன்

சாதிஎனச் சமயமென முளைத்துவந்த
சழக்குகளை விட்டுவிட்டேன்' என்றுகூறி
மேதினியில் மறுமலர்ச்சி காண வந்த
மேன்மைமிகும் இராமலிங்கர் அருட்பா நூலை
ஓதிவரும் தொண்டருக்குப் பஞ்ச மில்லை
சழக்குகளை ஒழிக்கத்தான் நெஞ்சமில்லை;
யாதினிநாம் செய்வதென எண்ணி எண்ணி
அகமெல்லாம் துடிதுடிக்கும் வெம்பும் சோரும்

முடிவளர்ப்பர் புதர்முளைத்த செடிகள்போலே;
முகம்மறைப்பர் மூக்குக்கண் ணாடி யாலே.
அடிமறைக்கும் தொளதொளத்த காலின் சட்டை;
அணிந்திருப்பர்; பூப்பொறித்த மேலின்சட்டை;
படிமறப்பர், நடைமறப்பர், தெருவில் செல்லும்
பாவையரை வழிமறைப்பர், கூத்த டிப்பர்;
குடிகெடுக்கும் காளைகளைக் காணும்போது
குமுறிமிகத் துடிதுடிக்கும் எனது நெஞ்சம்.

எதிர்காலம் இவர்கையில் என்று நம்பி
இருக்கின்றார் நிகழ்காலப் பெரியோர்; ஆனல்
உதிர்காலம் போலன்றே இளைஞர் வாழ்க்கை
உருள்கிறது; தளிர்காலம் வருமா என்னும்
புதிர்கோலம் இடுவதனல் எனது நெஞ்சம்
பொழிபனியின் குளிர்கால நடுக்கம்போல
விதிர்காணும் துடிதுடிக்கும்; அவர்தம் நெஞ்சில்
விடிகாலம் அரும்பிவரும் காலம் எனறோ?


புதியஅலை எனும்வலையை வீசி விட்டால்
பொருள்பெருகும் புகழ்வளரும் என்று நம்பி
மதிதவறி எழுத்தாளர் வீழ்ந்து விட்டார்;
மனமயக்கம் தருகின்ற காமச் சாற்றைப்
புதுமுறையில் பிழிந்தெடுத்து வார்த்து வைத்துப்
புத்தகங்கள் பத்திரிகை எழுதி விட்டார்;
கதையிதுவா கலையிதுவா இளைய நெஞ்சம்
கருகிவிடும் வழியன்றோ எனத்து டித்தேன்


நல்லறிவைப் பண்பாட்டை ஒழுக்கந் தன்னை
நாகரிகக் கலைவளத்தை விஞ்ஞா னத்தைச்
சொல்லுதற்குப் படைப்பாற்றல் கொண்டோன் கையில்
சுழல்கின்ற கோலொன்றே எழுது கோலாம்;
புல்லறிவால் பொருள்பெருக்கல் ஒன்றே நோக்கிப்
புழுத்ததெலாம் வரையுங்கோல் கன்னக்கோலாம்;
நல்லறிவைக் கெடுத்துமிகப் பொருள்ப றிப்போன்
நாட்டுக்கே தீங்கிழைக்கும் கொடியோன் ஆவன்

மறைப்பிடமே இல்லாமல் சதையைக் காட்டி
மன்மதனை ஏவல்கொளும் மங்கை நல்லார்
கறைப்படுமே பண்பாடென் றெண்ணு ராகிக்
கன்னத்தை வாடகைக்கு விட்டால் மீண்டும்
தரப்படுமே நடிப்பதற்கு வாய்ப்பென் றெண்ணித்
தரங்கெட்ட காட்சிகளில் நடித்துக் காட்டும்
திரைப்படங்கள் வளர்வதற்கிங் கிடங்கொ டுத்தால்
தெருப்புழுதி போலாகும் மக்கள் நெஞ்சம்

கற்பழிப்பு, களவாடல், கடத்தல் என்ற
கயமைஎலாம் கற்பிக்கும் கதைகள், கெட்ட
சொற்பெருக்கம் கொண்டொழுகும் காமப் பாட்டு,
துள்ளிவரும் நடனமெனப் பேயின் ஆட்டம்,
மற்போர்கள் செய்வதுபோல் காதற் காட்சி,
மாமேதை இயக்குநர்கள் திறமை எல்லாம்
கற்போர்கள் நெஞ்சத்தைக் கெடுப்ப தல்லால்
கடுகளவு நலமேனும் தருவ துண்டா?

எதைக்கண்டு துடிப்பதடா தமிழர் நாட்டில்
எதைக்கண்டு கொதிப்பதடா அந்தோ இங்குப்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;
மதிக்கின்ற வழிதேடி வடபு லத்தார்
மெல்லமெலப் பார்க்கின்றார்; இந்தி கொண்டு
வதைக்கின்ற வழியமைத்து வருதல் கண்டேன்;
வடவர்பிடி எத்தனைநாள் எனத்து டித்தேன்





# ஆபிரகாம் லிங்கனும் - அறிஞர் அண்ணாவும்

## ஆபிரகாம் லிங்கன்

"துப்பாக்கி ரவையை விட ஓட்டுச் சீட்டுதான் வலிமையானது என்று முழங்கியவர்!

ஏழைக் குடிசையிலே பிறந்தவர்!

இரவு முழுவதும் புத்தகங்கள் படிக்கும் குணமுள்ளவர்!

ஐம்பது மைல் வட்டாரத்தில் படிக்காத புத்தகங்களே இல்லை' என்று பெருமை பெற்றவர்!

ஆடம்பரம் என்பது துளியும் இல்லாதவர்.

சினம் என்பதையே சிறிதும் தீண்டாதவர்!

நகைச்சுவை சொட்டச் சொட்டப் பேசி எதிரிகளின் வாயை அடக்குவதில் வல்லவர்!

மற்றவரோடு எப்போதும் நன்கு பழகுபவர்.

ஒடுக்கப்பட்ட நீக்ரோ இன மக்களின் விடுதலைக்குப் பாடுபட்டவர்!

வாக்குச்சீட்டில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட இவர் முதன்முதலில் 'இல்லியானஸ்' மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றியைத் தழுவ முடியவில்லை;

இவர் பிறந்தது — 1809

## அறிஞர் அண்ணா

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்று முழங்கியவர்!

எளிய குடும்பத்திலே பிறந்தவர்:

விடிய விடிய புத்தகங்களைப் படிப்பவர்!

'மிகப் பெரிய — பல்லாயிரக்கணக்கான நூல்களைக் கொண்ட கன்னிமாரா நூலகத்தையே கரைத்துக் குடித்தவர் என்ற பெயர் பெற்றவர்!

ஆடம்பரமற்ற முறையில்— அடக்கத்தின் சின்னமாய்த் திகழ்ந்தவர்!

'ஆத்திரம் வந்து பார்த்ததே இல்லை' என்று மனைவி முதல் கட்சித் தொண்டர்வரை பாராட்டும் அளவுக்குப் பொறுமைக் கடலாய் விளங்கியவர்!

நகைச்சுவை மணம் வீச— மாற்றுக் கட்சியினரும் போற்றும் அளவுக்கு மேடைப்பேச்சுக்கே இலக்கணம் வகுத்தவர்!

தனிமையை விரும்பாமல் எப்போதுமே தம்மைச்சுற்றி நண்பர் குழாம் சூழ்ந்திருக்க உரையாடிக் களிப்பவர்!

தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்காக உரக்கக் குரல்கொடுத்தவர்!

வாக்குச் சீட்டின் வலிமையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட அண்ணா, முதன் முதலில் சென்னை மாநகராட்சித் தேர்தலில் பெத்துநாயக்கன் பேட்டையில் வெற்றியைத் தழுவ முடியவில்லை!

அண்ணா பிறந்தது —1909

-தொகுப்பு: நெய்வேலி சுப்பிரமணியம்

விரைவில் தொடங்குகிறது
'நம்நாடு' இதழில்
'ஊழ் வினை'
தென்னரசு எழுதும் மற்றொரு
உண்மைக கதை

4-ம் பக்க தொடர்ச்சி

முழக்கத்தைக் கழகத்தின் இலட்சிய முழக்கங்களில் ஒன்றாக வைத்திருக்கிறோம்!

இந்தி மொழியைத் திணிக்கும் ஏகாதிபத்தியவாதிகள் 42 சதவிகித மக்களுக்கு இந்தி தெரியும் என்பதால் மற்ற 58 சதவிகித மக்களும் இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள். இது தவறான வாதம் என்பதை டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் எடுத்துக் கூறுகிறார்.

"42 சதவிகித மக்களுக்குத் தெரியும் என்பதையே நான் ஏற்கமாட்டேன். 42 சதவிகித மக்களுக்கு இந்தி பேச மட்டும் தெரியலாம். இதிலே பல வகை இந்தி இருக்கிறது. மேற்கு உ. பி. யில் பேசப்படும் இந்தி வேறு. கிழக்கு உ. பி. யில் பேசப்படும் இந்தி வேறு. எனவே 42 சதவிகித மக்களுக்கு இந்தி தெரியும் என்பது சொத்தையான வாதமாகும்" என்று ஏ. எல். முதலியார் இடித்துரைக்கிறார்.

அதோடு மட்டுமல்ல; இதுபோன்ற முக்கிய விஷயங்களில் மக்கள் சம்மதம் மிக முக்கியம் என்கிறார் காலஞ் சென்ற டாக்டர் சுப்பராயன், மொழிக் குழுவில் உறுப்பினராக இருந்த அவர் கூறினார் :-

"ஆங்கிலத்தைப் புறக்கணித்து இந்தியைத் திணித்தால் நாட்டின் பொது வாழ்வில் ஒருவித குழப்பத்தை உண்டாக்கி விடும். இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சட்ட சபைகளைக் கலந்து ஆலோசியாமல் மத்திய சர்க்கார் ஒன்றும் செய்யக்கூடாது!"

தமிழகச் சட்டசபை மிகத் தெளிவாகக் கூறிவிட்டது 1968-ல் இந்தி வேண்டவே வேண்டாமென்று!

ஆந்திர - கேரள - கருநாடக முதல்வர்களும் ஏறத்தாழ இந்தித் திணிப்பை எதிர்ப்பதில் ஒருமுகமாகவே இருக்கின்றனர்;

தலைவிரித்தாடும் மற்றப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டிய மத்திய அரசு இந்திப் பிரச்சினையில் வேண்டாத விஷமங்களைச் செய்து வருகிறது!

தமிழர்களது இந்தி எதிர்ப்பு உணர்வைத் தூண்டுவது தூங்கும் புலியை இடர்வதற்குச் சமம்!

தமிழர்களது இந்தி எதிர்ப்பு உணர்வு — நிறுபூத்த நெருப்பு!

அதைப்பற்றி எரியவிடாமல் பார்த்துக் கொள்வது வடவர்களின் பொறுப்பு!

# அண்ணா ஒரு பொதுவுடைமைச் சிற்பி....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ராய் ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் வெளிப்படையாகவும் இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர்."

தமிழகத்தில் இந்தப் போராட்டம் எப்படி நடந்து வந்தது? இங்கே ஒடுக்குகின்றவர் யார்? ஒடுக்கப்படுகிறவர் யார்?

ஆரிய இனத்தவர் ஒடுக்குகின்றவர்களாக இருந்தனர்; திராவிட இனத்தவர் ஒடுக்கப்படுவோராய் இருந்தனர்.

எனவேதான் ஒதுக்கப்பட்ட இனத்துக்காக அண்ணா ஓங்கிக் குரல் கொடுத்தார். இதை இப்படியும் மாற்றிச்சொல்லலாம்; 'பொதுவுடைமைக் கோட்பாட்டின்படி திராவிடராகிய பட்டாளி இனத்துக்காக அண்ணா பறை முழக்கம் செய்தார்.'

மார்க்சும்—ஏங்கல்சும் வடித்துக்கொடுத்த 'வர்க்க — உணர்வில்' அண்ணாவோ இன—உணர்வு' இருப்பதைக் கண்டார்.

ஆழ்ந்து சிந்தித்தால் இரு உணர்வுகளுக்கும் பெருத்த வேறுபாடு இல்லை என்பது பெரிதும் தெளிவாகும்.

இந்த அடிப்படையில்தான் அண்ணா திராவிட 'இன உணர்வை—அதாவது பாட்டாளி இன உணர்வைத் திராவிட இயக்கத்தின் வாயிலாகச் செழிக்கச் செய்தார்.

மேலைநாடுகளில் ஆலை முதலாளிகள் ஆலைத் தொழிலாளிகளை எப்படி அடக்கி ஒடுக்கினார்களோ — அப்படித்தான் தமிழ்நாட்டில் சாதி முதலாளிகள், சாதித் தொழிலாளிகளை —'சூத்திரர்கள்' என்று பட்டஞ்சூட்டிச்சுரண்டினார்கள்; ஒடுக்கினார்கள்; அவர்களுடைய உழைப்பை உறிஞ்சினார்கள்.

எனவேதான் சாதி—முதலாளித்துவத்தை எதிர்த்து அண்ணா அவர்கள் இங்கே போர்க் கொடியைத் தூக்கினார்கள்.

எனவேதான் ஒடுக்கப்பட்ட—அவமானப் படுத்தப்பட்ட—திராவிடப் பாட்டாளி இன மக்கள் அவரின் பின்னால் அலைஅலையாக அணிதிரண்டனர். அதற்கு அவருடைய கன்னல் தமிழும் கைகொடுத்தது.

தொழிலாளிகளின் தோழராக—பொதுவுடைமைப் பூங்காவைச் சமைக்கும் புத்தறிவுச் சொல்லேர் உழவராக—அண்ணா எவ்வாறு அரும்பாடுபட்டார் என்பதற்கு இதோ அவரது எண்ண வைரங்கள் சில:

"உழைக்க ஒரு குலம்; அதனை உறிஞ்சப் பிரிதொரு குலம்; இந்த நியதி நியாயமா?"

"கோழியோடு அதிகாலையில் விழித்தெழுந்து கோட்டானோடு தூங்குகிறான் நம் தொழிலாளி! ஓயாமல் உழைத்து உழைத்து அருமையான பொருட்களை உற்பத்தி செய்கிறான். ஆனால் அவன் வாழும் வாழ்க்கை என்ன? சுருங்கச் சொன்னால் அவன் வாழ்வது மிருக வாழ்க்கை! மிருகங்களுக்குக் கிடைக்கும் ஓய்வுகூட ஏழைத்தொழிலாளிக்குக் கிடைப்பதில்லை. உற்பத்தியைப் பெருக்கும் தொழிலாளி உயர முடிகிறதா?"

"உழைப்பு, உருக்குலைந்துவிடக்கூடாது — உடலையும் சரி; உள்ளத்தையும் சரி! வாழ்விற்காக வசதி தேடுவதற்கு உழைத்து, அந்த உழைப்பினாலே உருக்குலைந்து போகும் நிலை மனிதனுக்கு ஏற்படுமானால்—அவன் முட்டையிட்டதும் செத்துவிடும் கோழி! அரும்புவிட்டதும் பட்டுப்போகும் செடி!."

### தமிழகத்துக்கேற்ற பொதுவுடைமைச் சிற்பி!

பேரறிஞர் அண்ணா அவர்கள்—தொழிலாளத் தோழருக்காகச் சொற்சிலம்பம் ஆடுகின்றவராக நடக்கவில்லை.

செயலளவிலும் ஒரு தொழிலாளியைப் போலவே எளிய உடை உடுத்தி—எளிய உணவருந்தி — பகட்டுத்தனங்களுக்கு இடமே கொடுக்காமல் எளியவாழ்க்கையே வாழ்ந்தார்.

குளுகுளுப்பான சூழலில் இருந்தால்தான் அவரை அரித்த கொடிய நோய் தணியும் என்று டாக்டர் மில்லர் அவர்கள் கூறியும்கூட 'குளுகுளு' வசதி கொண்ட வீட்டில் குடியிருக்க மறுத்தவர் அண்ணா!

தாம் முதலமைச்சரான நிலையில் அரசுச் செலவில் அழகான சோபாக்களைப்போட வந்தபோதும்—ஒரு பாட்டாளியின் மன உணர்வோடு அவற்றை வேண்டாம் என்றுவெறுத்து ஒதுக்கியவர் அண்ணா!

தாம் நடத்திய 'திராவிடநாடு'—'காஞ்சி' ஏடுகளில் மே—முதல் நாளை ஒட்டிச் சிறப்பு மலர்களைத் தொடர்ந்து வெளியிட்டு தொழிலாளர்களுக்காகப் புரட்சிக் குரல் எழுப்பியவர் அண்ணா

எனவே பேரறிஞர் அண்ணா அவர்கள் பொதுவுடைமைப் புத்துலகச் சிற்பியாகத்தான் தமது பொது வாழ்வுப் பணியை மேற்கொண்டிருந்தார் என்பது தெள்ளத் தெளிவான உண்மை,

ஆனால் அந்தப் பொதுவுடைமைப் பூங்கா தமிழக மண்ணுக்கு ஏற்ப—தமிழரின் மொழி, கலை, பண்பாட்டு உணர்வுக்கு ஏற்ப—அமைய வேண்டும் என்று அவர் விரும்பினார்.

சோவியத் ரஷ்யா விரித்த 'இரும்புத் திரைக்குள்' அடங்க மறுத்த யுகோஸ்லேவியாவும் அல்பேனியாவும் தன்னிச்சையான பொதுவுடைமை நாடுகளாகத் தலைநிமிரவில்லையா? தங்களுடைய சீன மொழி—சீன இனம் இவற்றின் தனித் தன்மைகளைக் காத்துக்கொண்டே செஞ்சீனம் இன்று செழிக்கவில்லையா? சோவியத் முறைக்கு மாறுபட்டு இன்று 'ஈரோ—கம்யூனிசம்' என்னும் புதிய பொதுவுடைமைச் சிந்தனை அரும்பவில்லையா?


அந்த முறையில்தான் அண்ணாவும் தமிழ்நாட்டுக்கு ஏற்ற ஒரு பொதுவுடைமை ஆட்சிமுறை சமுதாய முறை—அமைவதற்குப் போராடினார். அதற்குள் இறப்பு அவரைப் பறித்துக் கொண்டு விட்டாலும் அவர் இசைத்த போர்ப் பரணி என்ன தெரியுமா?

'ஜார் மன்னன் ஆட்சியிலே அவனது கொடுமைகளை ஒழிக்க மக்கள் எப்படி ஒருமித்துப் போராடினார்களோ—பிரான்சிலே பணப் பட்டாளத்தின் கொடுமைகளை எதிர்த்துப் பட்டினிப் பட்டாளங்கள் எப்படி லூயி மன்னனுக்கு அறிவுறுத்தினார்களோ—அப்படித்தான் நம் நாட்டுத் தொழிலாளர்கள் ஒன்று சேர வேண்டும்; முதலாளித்துவத்துக்குப் புத்தி புகட்ட வேண்டும்"

ஆகவே, தமது வைரமணிக் கருத்துக்களாலும் வாழ்க்கை முறையாலும் அண்ணா ஒரு பொதுவுடைமைச் சிற்பிதான் என்பதில் ஐயம் ஏது?

★★★★★★★★★★

பேசியது அரை மணி நேரம்; படித்தது ஆறுமணிநேரம்!




★★★★★★★★★★★

# நமக்குக் கிடைத்த நற்பெரும் தலைவர்!

ஒரு தத்துவத்தைக் கண்டு பிடித்து அந்தத் தத்துவத்தைத் தனது இயக்கத்திற்குக் கொள்கையாக வகுத்துக் கொண்டு, அந்த இயக்கத்தை உருவாக்குகின்ற தலைவன் இயற்கைத் தலைவனாகிறான் (Natural Leader) அப்படிப்பட்ட தலைவன்தான் பொதுவுடைமைத் தத்துவத்தின் சிற்பி கார்ல் மார்க்ஸ். அந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் சுயமரியாதைத்தத்துவத்தின் அடிப்படையில் ஒரு இயக்கம் கண்டு அந்தத்தத்துவத்திற்காகக்காலமெல்லாம் உழைத்த தந்தை பெரியாரும் ஒரு இயற்கைத் தலைவர் ஆவார்.

கார்ல்மார்க்சுக்குப் பின்னால் அவனுடைய தத்துவத்தின் அடிப்படையில் இயக்கம் நடத்தி வெற்றிகளைக் குவிக்க லெனினும், ஸ்டாலினும் தேவைப்பட்டார்கள்; அவர்கள் இருவரையும் வசீகரத்தலைவர்கள் (Charismatic Leaders) என்றழைக்கலாம். காரணம ரஷ்ய மக்கள் இந்த இரு பெரும் தலைவர்களின் எழுத்தால், பேச்சால் வலிவுபெற்ற கார்ல்மார்க்சின்கொள்கைகளை விரும்பி ஏற்றுக் கொண்டு தங்களை அந்த இயக்கத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்கள் ஆணைக்குக் கட்டுப் பட்டார்கள். அந்த அடிப் படையில் பார்த்தால் தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையின் வழி நின்று அந்தக்கொள்கைக்கு வலிவும் பொலிவும் சேர்க்க நாடு நகரம், பட்டி தொட்டிகளில் மக்களைச் சந்தித்து, தங்களின் பேச்சால், எழுத்தால், மக்களைத்தம்வசம் ஈர்த்து வெற்றிகளைக் குவித்திட்ட நமது தலைவர்கள் மறைந்த அண்ணாவும், இன்றைக்கும் நம்மை வழி நடத்திச் செல்கின்ற தளநாயகன் கலைஞரும் (Charismatic Leader) அல்லவா?

தந்தை பெரியாரின் சமுதாயச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட, சட்டமாக்கப்பட அரசியலின் துணை வேண்டுமென முடிவெடுத்த அண்ணா அவர்கள் கண்ட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். ஆக இருவரின் நோக்கமும் கொள்கையும் ஒன்றுதான். ஒருவர் அரசியல் ரீதியாக மக்களிடம் அதே கொள்கையை எடுத்துச் சொன்னார். மற்றொருவர் சமுதாய ரீதியாக அந்தக் கொள்கைக்கு வலியூட்டினார். மலையைப் பிளக்கும் 'டைனமைட்' வெடி குண்டாகத் தந்தை பெரியாரின் பிரச்சாரம் இருந்தது. உடைக்கப்பட்ட பாறையைக் கொண்டு பகுத்தறிவு ஊருக்குப்பயணம் செய்யும் பாதையை நிர்மாணிக்கும் பணியை அண்ணா ஏற்றுக் கொண்டார்.

"தி.மு. கழக வரலாற்றின் ஒரு பகுதியை நான் எழுதி விட்டேன். தொடர்ந்து எழுத என் தம்பி கருணாநிதி எனக்குப் பின்னாலே இருக்கிறான்" என்று அன்றைக்கு மன்னார்குடி கூட்டத்தில் குறிப்பிட்டுச் சென்றவர் அண்ணா. இது அண்ணா அவர்கள், தமக்குப் பின்னாலே தலைவர் கலைஞர் பேசுவார் என்று அன்றைக்குக் குறிப்பிட்ட வார்த்தைகளாக இருக்கலாம். ஆனால் இன்றைக்கு அண்ணாவிற்குப் பிறகு எவ்வளவு உண்மையாகி விட்டது என்பதை எண்ணும் போது அன்றைக்கே அண்ணா அவர்கள் எவ்வளவு தீர்க்க தரிசனத்தோடு சொல்லியுள்ளார் என்பதுதான் சிறப்புக் குரியது.

**டி.ஆர்.பாலு**

அண்ணா மறைந்து 9 ஆண்டுகள் உருண்டோடி விட்டன, அந்த நாள் முதல் இன்னாள் வரை இந்த இயக்கத்திற்கும் இதை நடத்திச்செல்கின்றதலைவர்களுக்கும் எத்தனையெத்தனை சோதனைகள்! ஒன்றா? இரண்டா? விசாரணைக் கமிஷன்கள், பொய் வழக்குகள், வானொலி டெலிவிஷன்களின் விஷமப் பிரச்சாரங்கள், ஏளனங்கள், ஏகடிய மொழிகள், அவைகளுக்குவிளக்கமளித்துப் பதில் சொல்ல முடியாத வாய்ப்பூட்டுச் சட்டங்கள், இவற்றிற்கிடையே கூடவே இருந்து குழிபறித்த குறுமதியாளர்கள்; அனைத்துச் சோதனைகளையும்சமாளித்து, தனக்கு நிச்சயம் துரோகம் செய்ய நினைக்காத பேனா ஒன்றின் உற்ற துணையை மட்டுமே நம்பி வாழும் அந்தத் தங்கத் தலைவன் இந்த இயக்கத்தை ஒரு பேரழிவிலிருந்து காப்பாற்றிய உண்மையை இந்த நாடு உணர்ந்துள்ளது. என்றைக்கும் அந்தத் தலைவனுக்கு இந்த இயக்கம் நன்றி செலுத்தியாக வேண்டும். அந்த நன்றிக்குரிய தலைவர் நம் கலைஞர் வாழ்க! கழகம் வாழ்க! அண்ணா, பெரியார் புகழ் ஓங்குக!

★

## சமத்துவம் மலர-சாதியை ஒழிப்போம்!

★

பணக்காரனுக்கும் ஏழைக்கும் இடையே இருக்கும் இடைவெளி வளர்ந்து கொண்டே போகிறது. சமுதாயத்திலுள்ள வறிய, பாதுகாப்பற்ற வர்க்கங்கள் நிலப்பிரபுக்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, அவர்களுடைய சுயநல வேட்டைக்கு இரையாகின்றன. ஆனால் அந்த ஒடுக்கப்பட்ட வர்க்கம் விழித்துக் கொண்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதால் இரு வர்க்கங்களுக்குமிடையே நாளுக்கு நாள் போராட்டம் தீவிரமடைந்து கொண்டே போகிறது.

இந்தச் சமுதாயத்தில் 'சாதி-பேத' அமைப்பு முறை இருக்கின்றவரை — இருப்பவனுக்கும் இல்லாதவனுக்கும் இடையே நடக்கும் போராட்டத்திற்கு ஒரு தீர்வு காண முடியாது.

எம் சி. சாக்ளா,
(முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி)

பெரியார் — அண்ணா புகழ் ஓங்குக!

★ தரமான வண்ண அச்சு வேலைகளுக்கு ★

லோட்டஸ் ஆப்செட் பிரஸ்

9, லோட்டஸ் இராமசாமி தெரு, இராயபுரம் - சென்னை- 600013

தொலைபேசி: 553422

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயணசெட்டி தெரு, இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டுவெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்'508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.